பாவையும் பள்ளி எழுச்சியும்

மணிவாசகப்பெருமான்

இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை

பாவையும் பள்ளி எழுச்சியும்

(தெளிவுரையுடன்)

உரையாசிரியர்

இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை

அல்லூர் 620101

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

நூல் விளக்கம்

நூல் பெயர்	பாவையும் பள்ளி எழுச்சியும்
ஆசிரியர்	இரா. இளங்குமரன்
பதிப்பு	2009
பக்கங்கள்	120
நூல் அளவு	கிரௌன்
தாள்	11.6 வெள்ளைத் தாள்
விலை	உரூ.40 /–

வெளியீடு

திருவள்ளுவர் தவச்சாலை

அல்லூர் 620101

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தவப்பெருந்திரு ஆத்மானந்த அடிகளார்

உள்ளுறை

நூல் வருமுறை பாவையும் பள்ளி எழுச்சியும் 5

திரு எம் பாவை - விளக்கம் 8

திரு எம்பாவை - மூலமும் தெளிவுரையும்

1. ஆதியும் அந்தமும் 14

2. பாசம் பரஞ்சோதி 18

3. முத்தன்ன வெண்ணகையாய் 22

4. ஒண் நித்தில நகையாய் 26

5. மாலறியா நான்முகனும் காணா 30

6. மானே நீ நென்னலை 34

7. 'அன்னே இவையும் சிலவோ?' 37

8. கோழி சிலம்ப 40

9. முன்னைப் பழம் பொருட்கும் 43

10. பாதாளம் ஏழினும் கீழ் 46

11. மொய்யார் தடம்பொய்கை 49

12. ஆர்த்த பிறவித் துயர்கெட 52

13. பைங்குவளைக் கார்மலரால் 54

14. காதார்குழையாட 57
15. ஓரொருகால் எம் பெருமான் 60
16. முன்னிக் கடலைச் சுருக்கி 63
17. செங்க ணவன்பால் 66
18. அண்ணா மலையான் 70
19. உங்கையிற் பிள்ளை 74
20. போற்றி அருளுக 78
திருப்பள்ளி எழுச்சி - விளக்கம் 81

திருப்பள்ளி எழுச்சி - மூலம் தெளிவுரையும்

1. போற்றி என் வாழ்முதல் 86
2. அருணன் இந்திரன் திசை 90
3. கூவின பூங்குயில் 93
4. இன்னிசை வீணையர் 96
5. பூதங்கள் தோறும் 99
6. பப்பற வீட்டிருந்து 103
7. அதுபழச் சுவையென 106
8. முந்திய முதல் நடு 109
9. விண்ணகத் தேவரும் 113
10. புவனியிற் போய்ப் 116

நூல் வருமுறை

பாவையும் பள்ளி எழுச்சியும்

பாவை, மணிவாசகப் பெருமான் அருளிய திரு எம்பாவை. பள்ளி எழுச்சி, அப்பெருமானே பாடியது

பாவையும் பள்ளி எழுச்சியும், எழுச்சிப் பாடல்கள்.
இயற்கை எழுச்சியை இறைமை எழுச்சியாய்
இணைத்துக் கண்டு எடுத்தெடுத் தோதி
இன்புற்ற பாடல்கள்!

இயற்கை, ஒழியாத இயங்கியல்பினது, என்றும் ஓயுதல் செய்யாத இயக்கத்தினது.

கதிரா மதியா விண்மீனா காற்றா நீரா மண்ணா எல்லாம் இயங்கியல் தளரா இயல்பினவை! தத்தம் இயல்பு தாழாமல் தனித்தனித் தன்மைகளை விட்டுவிடாமல், ஒன்றனை ஒன்று முட்டாமல் மோதாமல் தத்தம் கடனாற்றி என்றும் இலங்குபவை, உலகுக்கு வழிகாட்டியாம் ஒரு பெருங்குருவன் நிலையாம். இவ்வியற்கை இயங்கியல் மூலம் எது? அதனை உணர வைத்த நுண்மாண் நுழைபுலப் பெயர் எது? அது, 'இயவுள்' என்பது. இயவுள் என்பது இயக்காற்றலாம்! அது, ஆதியும் அந்தமும் இலாதது; அருள் வடிவினது; ஒளிப் பிழம்

பினது; இன்பத்தின் இருக்கையினது; கறை குறை அற்றது, அதனைக் கண்ணின் கவின் காட்சியாய்க் கடல்மேல் செங்கதிராய்க் கண்டது உயர்ந்தோர் உள்ளம்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு,
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு"

என்றது. செங்கதிரைச் 'சிவமாய்' 'செவ்வேளாய்' 'செம்பொருளாய்' 'செம்மா மணியாய்' வியந்து வியந்து நின்றது. அதன் எழுச்சி யாலேயே உலக எழுச்சி உண்டாகிறது; உயிர்கள் எல்லாம் உவக்கின்றன; உயர்ந்தோர் அனைவரும் உயர்வற உயர்ந்த அதனை உவகையால் பாடிப்பாடித் திளைக்கின்றனர். அதன் எழுச்சி, பேரொளி, பொதுமை ஒப்புரவு ஆகியவற்றைச் சிக்கெனப்பற்றிக் கொள்ள விரும்பு கின்றனர். அப் பாவையும் பாட்டும், ஒவ்வொருவர் வாழ்வையும் எழுச்சியுறச் செய்யட்டும் அதன் பேரொளி எங்கும் பரவட்டும். அதன் பொதுமை ஒப்புரவு உலகோம்பட்டும்! கதிர் உலகப் பொது! விழிப்பு எழுச்சி என்பவும் உலகப் பொது! இப் பொதுமை கமழட்டும்! பொதுமை இயவுள் பொலியட்டும்! 'பாவையும் எழுச்சியும் எவர்க்கு வேண்டும்?' எனின், 'எவர்க்கும் வேண்டும்' என்பது மறுமொழி.

இளையர், பயில்வோர், உழைப்போர், அலுவலர், ஆணையிடுபவர் ஆக்கும் திறலர், ஆளும் திருவர், அருளற மேலோர்; அவர், ஆடவர் எனின் என்ன, பெண்டிர் எனின் என்ன, அவர்க்கெல்லாம் பாவையும் எழுச்சியும் வேண்டும்!

உடலுக்கே முதுமை யுண்டு! உள்ளத்திற்கு முதுமை உண்டா? முதுமைத் துயர் உடலுக்கே அன்றி, உள்ளத்திற்கு இல்லை! எண்பத்தோராம் ஆண்டிலும் எழுச்சிப் பிறப்பாக அப்பரடிகள் திகழ வில்லையா?

நம் கண்காண நூற்றாண்டை ஒட்டியும் எழுச்சியராக எவரெவர் வாழ்ந்து வழிகாட்டியுளர்!

அவ்வீறு வாய்ந்தார் இயற்கை இயங்கியல் உணர்ந்தார்! முதுமை நிலா அழகு நிலா பூத்தது விண்மேலே, இளமைத் துடிப்போடு! இற்றைக் கதிரா மீனா? தொய்விலா இயக்கமே வடிவாக இல்லையா? இவற்றின் கொடையே பாவையும் பள்ளி எழுச்சியும் என்றால், பாருக்கெல்லாம் பொதுமைச் சிறப்பினது அல்லவோ!

அண்ணல், அடிகள், ஆருயிர்க்கு அன்பர், ஆம்! ஆத்மானந்தர் சேலம் மாவட்டம் கணவாய்ப் புதூர் என்னும் மலைச் சாரலூரில் கலைநிலையம் காண்கிறார்! அன்னை சாரதையார் பெயரால் அறிவியல் கலைக்கல்லூரி! மகளிர் மாண்புக்காக! அதன் திறப்பு விழா திருவள்ளுவராண்டு 2040 ஆனித் திங்கள் 25 ஆம் நாள் (9.7.2009) பள்ளி எழுச்சியுற்றுக் கல்லூரி எழுச்சிக்குக் கால்வைக்கும் பாவையர் தம் எழுச்சிக்கு, இப்பாவையும் பள்ளி எழுச்சியும் பயனாமே என்னும் எண்ணத்தில் நூலாக்கம் பெற்றது.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளின் முன்னர்த் திருச்சிராப் பள்ளி வானொலியில் பொழிந்த பொழிவு; வான்சரிவாய் இலங்கும் கணவாய்ப் புதூரில் மீளப் பொழிந்த வகையாய் அச்சிடப் பெறுகின்றது! அச்சிடுதலை அறத்தொண்டாகவும் ஆக்கத் தொண்டாகவும் கொண்ட கோ. இளவழகனார்க்கு இனிய நன்றியுடையேன்.

கணவாய்ப் புதூர்க்கு மட்டுமா, பாவையும் பள்ளி எழுச்சியும்! பாருக்கெல்லாம் பொதுப் பொருள் அல்லவோ அவை! பொது நலம் பொலியப் புத் தெழுச்சி திகழட்டும்!

வாழிய நலனே! வாழிய நிலனே!

இரா. இளங்குமரன்

திரு எம் பாவை விளக்கம்

திருவாசகம் அகவல் பெருக்கச் சங்கக் காலத்திற்கும் பாவினத் தோற்ற இடைக்காலத்திற்கும் நடுவே அமைந்த காலத்தில் தோன்றியது. அதனால் முதல் நான்கும் அகவல் களாயின. அவை சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் என்பன.

இவற்றை அடுத்து வருவது திருச்சதகமாகிய நூறு பாடல்கள். இவை பத்துப் பத்துகளை உடையது. கட்டளைக் கலித்துறை, கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் என்பவற்றால் அமைந்தது. அடுத்து வருவது நீத்தல் விண்ணப்பம். ஐம்பது பாடல்களைக் கொண்டது; கட்டளைக் கலித்துறையால் அமைந்தது.

அதன் மேலே வருவது திருவெம்பாவை. அது வெண்டளையான் வந்த இயற்றரவினைக் கொச்சகக் கலிப்பாவான் அமைந்தது. இத் திருவெம்பாவை என்னும் பெயரீடு, பாடலின் இறுதியில் வரும் **'எம்பாவாய்'** என்னும் விளிகொண்டு அமைந்தது. இம்முறையே முறையாய் அம்மானை, பொற்சுண்ணம், கோத்தும்பி, தெள்ளேணம், சாழல், பூவல்லி, உந்தியார், தோணோக்கம், பொன்னூசல், அன்னைப் பத்து, தசாங்கம், குயிற்பத்து, பள்ளி எழுச்சி என்பவை தொடர்கின்றன.

இவற்றுள் எம்பாவைமுதல் உந்தியார் வரையுள்ளவை ஒரு பொதுமையைக் கொண்டன. அப்பொதுமை ஒரு தலைப்பில் இருபது பாடல்கள் என்பது. உந்தியாரை அடுத்த தோணோக்கம் பொன்னூசல் என்பனவும் இவ்வாறே இருபது பாடல்களாக இருந்து பின் சில பாடல்கள் கிடைக்க வாய்க்காமல் 14 என்றும், 9 என்றும் அமைந்திருக்க வேண்டும். இனித் திரு எம்பாவை என்பது அப்பாடல் இறுதியில் இடம் பெறும் 'எம்பாவாய்' என்பது கொண்டு இடப்பட்டது. இது தொடங்கிப் பிறவும் அவ்வாறு தொடர்தல் அறியத் தக்கது என்பது குறித்தோம். இருபது பாடல் எனக் கொண்டதும், எம்பாவை எனப் பெயர் கொண்டதும் திருவெம்பாவைக்கு மட்டுமன்றி மேலே பலவற்றுக்கும் பொதுவாம். இருபது பாட்டும், சொல்லிறுதிப் பெயரீடும் கொண்டது இவை எனக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் திருப்பாவை போல் திருவெம்பாவை 30 பாடல்களைக் கொள்ள வில்லை என்பார் சிந்திப்புக்கு இவ்வாய்வாம்.

இனிப் 'பாவை' என்றவுடன் பலர்க்கும், திருப்பாவை எனப் பின்னே வந்த பாவையொடு, முன்னே கிளர்ந்த எம் பாவையை இணைத்துக் காட்ட வேண்டும் என்னும் எண்ணம் ஊன்றிப் போய்விட்டது.

திருப்பாவை கண்ணனைக் கணவனாகக் கொள்ள ஆண்டாளார் பாடிய பாட்டு. தம்மொடும் ஒத்த கன்னியரும் அவ்வாறே கொள்ளக் கருதுவதாக அமைத்துக் கொண்டு பாடியபாட்டு. ஆனால், திருவெம்பாவை ஆளுடைய அடிகள் பாடியபாட்டு. இளமகளிர் தாம் கொண்ட பாவையை நோக்கிப் பாடுவதாக அமைந்த பாட்டுகள் அவை.

திருப்பாவை மகளிர், கண்ணனை மணக்கக் காதல் கொண்டு பாடியது போல், கண்ணுதல் பெருமானை மணக்கக் கன்னியர் காதல் கொண்டதாக எப்பாடலும் திருவெம் பாவையில் அமையவில்லை என்பதை ஊன்றி உணர்ந்து கொள்ளல் வேண்டும். இரண்டையும் பாவை என ஒருமைப் படுத்துபவர் எண்ண வேண்டும் செய்தி இது.

விடிந்தும் விடியா முகத்தராய் உறங்கிக் கிடப்பாரை எழுப்பி இறையருளை வேண்டிக் கொள்ளுமாறு ஏவும் ஏவுதலே இப்பாடல்கள்!

'காலையில் எழு', 'கடவுளைத் தொழு' என்பதன் விளக்கமாக அமைந்துள்ளவை இவை.

வீடுதோறும் தாய்மார் அல்லது தந்தைமார் அல்லது மூத்தோர் குழந்தைகளையும் இளையரையும் எழுப்பும் வழக்கம் முன்னையும் இன்றையும் அன்றி என்றும் காணக் கூடியதாகவே இருக்கும்.

எழுப்பவும் எழும்பாராய்த் தண்ணீர் தெளித்தாலும் துடைத்துக் கொண்டு உறங்குவாராய் இருப்பார் இல்லாமல் இல்லை.

காதலனைக் காதலி தன் கருத்தை விட்டு அகலாளாய்க் கொண்டிருத்தலை வள்ளுவர், "விழிக்குங்கால் நெஞ்சத்தராவர் விரைந்து" என்பார். அவ்வாறு விழிக்கும் போதே இறையடியார் உள்ளம் இறைமையில் தோய்ந்து கிடக்கும் - தோய்ந்து கிடக்க வேண்டும் என்பது இதன் பிழிவாகும்.

எழுப்ப எழும்பாமையும், புரண்டு புரண்டு கிடத்தலும், எழுப்புவாரை மறுத்து எதிரிட்டு உரைத்தலும், இடித்

துரைத்தலும், எள்ளலும் என்பவை எல்லாம் வாழ்வியல் நடைமுறைச் செய்திகளே. இறைவன் திருப் பெயர் கூறல், திருப்புகழ் பேசல், அருளிச் செயல், ஆற்றல், தோற்றம் என்பவை உரைத்தல், அருட் பிழம்பாம் அம்மையை இறைவன் உடன்கொள்ளல், அம்மை அருள்விளக்கம் என்பன வெல்லாம் இப்பாவையின் பாடு பொருளாகச் சிறக்கின்றன. பாவைச் செல்வியர், தம் கணவராக வருவார், இறையடியாராகவே இருக்க வேண்டும் என்றும் அவர்க்கே பணி செய்ய வேண்டும் என்றும் வேண்டுகின்றனர்.

கணவன் இறையடியானாக வாய்க்க வேண்டும் என்ற அவர்கள், தமக்கெனக் கொண்டுள்ள கொள்கை வீறு என்ன என்பதை வெளியிட்டு அதனை அருளவும் வேண்டுகின்றனர்:

“எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க”
“கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க”

என்பது அது. அடியார் அன்றிப் பிறர் கணவராக வாய்ப்பின் இவ்வெண்ணம் நிறை வேறல் அருமை அல்லவோ!

“போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்”

என்னும் பாடல் இறுதியில்,

“போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்”

என்று மார்கழித் திங்கள் சுட்டப்படுகிறது. அதனால் மார்கழி நீராடல் என்றும் வழக்கில் உண்டாயிற்று. தைந்நீராடல் தனிச் சிறப்பினதாகப் பரிபாடல் பேசுகின்றது. அது,

“தாயருகா நின்று தைந்நீராடல்”

என்பது. குழந்தையரும் இளமையரும் கூடி ஆடலால் தாயரும் அவர்களை அடுத்துநின்று விழிப்பாக இருந்தமை புலப்படும் 'தைந்நீர்' குளுமை மிக்கது என்பதனால்,

'தைஇத் தண்கயம்'

எனப்படும். அது பாரி பனிச் சுனைத் தண்ணீர்க்கு உவமையாகக் கூறப்படும்.

இளமகளிர் பாவை செய்து வைத்து அதனை முன்னிலைப் படுத்திப் பாடினர்; அம்மையைப் பாடியதுடன் அப்பனையும் இணைத்தே பாடினர்; தமக்குத் தக்க கணவன் வாய்க்க வேண்டும் என்றும்; வான்வளம் வாய்க்க வேண்டும் என்றும் பாடினர். 'எம்பாவை' என்ற ஈற்றுச்சீர் திருவொடு சேர்ந்து திருஎம்பாவை (திருவெம்பாவை) என்று முந்து வழங்கியது கொண்டே, அதே 'எம்பாவை' என்னும் ஈற்றுச்சீர் கொண்டே பாடப்படினும் திருப்பாவை என்று வழங்கலாயிற்று; அதே பெயர் கொள்ளாமை வேண்டி என்க.

இனி அடிகளார் அருளிய அம்மானையும் சுண்ணமும் அடுத்தே வருவன. அவையும் மகளிர் வாக்காகப் பாடப் பட்டனவேயாம். இவை இக்காலம் என்றின்றி எக்காலத்தும் பாடத் தக்கன வாதல் போலவே எம்பாவையும் காலவரம்பு பட்டதெனக் கொள்ளாமல் பொதுமைப் படுத்துதலே அடிகள் கருத்து என்பது விளங்கும். திங்கள் அளவு எனின், அடிகள் 30 பாடல்கள் பாடி யிருக்கத் தடை எதுவும் இல்லையாம்.

இனி எப்பாடலிலேனும் நோன்பு என்னும் சொல் இடம் பெற்றிலது என எண்ணல் வேண்டும். இதன் தலைப்பு 'சத்தியை வியந்தது' என்பதும் முழுமை தழுவிய குறிப்பு ஆகாது என்பதையும் எண்ண வேண்டும்.

அடிகள் எம்பாவை பாடியது, **"விழிமின்! எழுமின்! இடைவிடாது சென்று குறியை அடைமின்"** என ஏவும் இணையிலா எழுச்சிப் பாடலாகவாம்!

இயற்கை எழுப்பியும், ஓரறிவு முதலாம் உயிரிகள் எழுந்து எழுச்சி காட்டியும், ஆறறிவுப் பிறவி அயர்ந்து மடிந்து கிடத்தல் அறிவோ ஆக்கமோ ஆமோ என எண்ணவைப்பதாம்!

கல்வியில் தோயும் **இளையர்,** முயற்சியில் தோயும் **வாலியர்,** ஆய்வில் தோயும் **அறிஞர்** ஆய அனைவரும் விடியுமுன்னரே எழுந்து, எழுச்சியும் ஒளியும் ஏற்றமும் இடைவிடா இயக்கமும் கொண்ட கதிரோனொப்ப வாழ்வியல் ஒளியால் திகழ வேண்டும் என்னும் தூண்டலே எம்பாவைப் பாடலாம்.

மகளிர், இறையடியாரே மணவாளராய் வாய்த்தல் வேண்டும் என்றதுபோல், ஆடவரும் இறையடியாரே மணவாட்டியராய் வாய்க்க வேண்டுமெ என்று வேண்டவும், மகளிர், இறைத் தொண்டே எம் தொணடாய் இலங்க வேண்டும் என்றதுபோல், ஆடவரும் இறைத் தொண்டே எம் தொண்டாய் இலங்க வேண்டும் என்று வேண்டவும் வேண்டும் எனப்பொருள் கொள்ளல் தமிழிலக்கண மரபாம். அது,

"ஒருபாலுக்கு உரைத்த செய்தி மற்றைப் பாலுக்கும்
உரைத்தசெய்தியே"

எனக் கொள்ளல் வேண்டும் என்பது.

இவ்வகையால் ஆடவர் மகளிர் இருபாலரையும் விழித் தெழச் செய்யும் சிறப்பினது இப்பாடல் எனக் கொள்ளல் முறையாம். ஆதலால் **திருவெம்பாவையின் ஊடகம் விழிமின், எழுமின், இடையறாது பணியாற்றுமின், ஏற்றம் எய்துமின் எனக் கொள்வோமாக!**

திரு எம்பாவை - மூலமும் தெளிவுரையும்

1. ஆதியும் அந்தமும்

ஈதோ ஒளி! அரிய ஒளி! பெரிய ஒளி! இயற்கை இறையின் ஒளி! இது, என்று தோன்றியது? எப்படித் தோன்றியது?

எவர் அறிவார்?

இவ்வொளிக்கு என்று முடிவு நாள்? என்றே தீர்ந்து அணையும் நாள்?

எவர் கண்டார்?

தோற்றமும் இல்லாப் பொருள் அது.
முடிவும் இல்லாப் பொருள் அது!

தோற்றமும் முடிவும் இல்லாப் பொருளைத், தோற்றமும் முடிவும் கொண்ட மாந்தப் பிறவியால் அறுதியிட்டு உறுதி சொல்ல இயலுமா?

கோடி கோடி கல்லுக்கு அப்பால் இருந்தே காணக் கூசச் செய்யும் ஒளியும், சுட்டெரிக்கும் வெப்பும், கொண்ட அப்பேரொளி ஒன்றா இரண்டா? கோடி கோடி அல்லவோ?

அவ்விறை ஒளியை ஆய்வார் ஆய்க! அணுகுவார் அணுகுக! யாம் அவற்றைப் பற்றிய கவலை கொள்ளோம்!

பாடுவோம்! பாடித்திரிவோம்! கூடுவோம்! குளிர்வோம்! வைகறையில் எழுந்து அவ்வொளி வெள்ளத்தில் ஆடித் திளைக்கத் தெருத் தெருவாய்க் கூவி அழைத்து, யாம் பெறப்போகும் இன்பத்தை நீவிரும் பெறுக - என அழைத்து நிற்கிறோம்! அது கேட்காமல் - அந்த இன்பத்தை அடையும் ஆர்வம் இல்லாமல் உறக்கமாம் உறக்கம்! என்ன பிறவி இது!

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்"

உறக்கம் வருகிறதா?

உன் கண் எத்தகைய ஒளியுடைய கண்! பெருங்கண்! கண்டாரைக் கவரும் உன் கண்களை இறுக நீ மூடிக் கொண்டு நீ படுக்கையில் கிடக்கிறாய்! கிடக்கலாம்! ஆனால் எப்பொழுதும் மூடப் பெறாமல் திறந்தே கிடக்கும் உன் காதுக்கு என்ன வந்தது? இன்னிசைக்கு உருகும் உன் செவி எவ்வளவு மென்செவி! இன்று என்ன, கேளாச் செவியாயிற்றா? சொல்வது கேளா வலிய செவியாயிற்றா?

"வாள் தடங்கண், மாதே, வளருதியோ; வன்செவியோ
நின் செவிதான்"

பொன்னம் பெரிய தேவனின் திருவடிகளை வாழ்த்திய ஒலி மெல்லியதா, கூவி நிறுத்தியதா, வீடு கடந்து தெருக்கடந்து வீதிக்கும் எட்டும் ஒலி! இதனைக் கேட்ட அளவில் எழுந்து ஓடி வந்திலளே; இது நெட்டுறக்கமா? சோம்பிக் கிடக்கும் மடித்தனமா? என்று எண்ணோம்! இறைவன் திருவடி வாழ்த்தைக்

கேட்ட அளவில், இன்னும் எழாமல் உள்ளேனே; ஊர் எழும்பிவந்தும் உறங்கிக் கிடந்தேனே! என் செயல் என் செயல்! என்று ஏங்கியும் விம்மியும் தன்னை மறந்து தவிக்கிறாள்! பூமெத்தையின் இப்பாலும் அப்பாலும் புரண்டு புரண்டு கிடக்கிறாள்! ஆனால் வேறு ஏதாவது ஆகிவிடுவாள் என எண்ணாதீர்; நம்மினும் மேம்பட்ட இறையுணர்வில் தான் எழும்பாமலே படுகிடை கிடக்கிறாள் என்று எழாமல் உறங்கு வாளைப் புகழ்வார்போல் நகையாடு கின்றனர் பாவைச் செல்வியர்.

"மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம் மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே!"

எளிய திருக் கூட்டத் தெய்தி இசைபாடி இறையின்பத்துத் தோய்ந்த இளஞ்செல்வியர்களே, இவ்வுயரிய இறையுணர்வின் மேம்பாடே இவள் எழும்பாமைக் காரணமாம் என்பதை உணர்வோமாக!

படுக்கையை விட்டு உரிய பொழுதில் எழுந்து கடன்களை முடித்து நம்மோடு சேர்ந்து கொள்ளாத அளவுக்கு இறையன்பில் மூழ்கி விட்டாள்; அப்பேறு நமக்கெல்லாம் எளிதில் வாய்க்கக் கூடியதா?

"ஈதேளம் தோழி பரிசேலோர் எம்பாவாய்!"

வசையாக்கிப் புண்படுத்த வாய்த்ததா வாய்?
இசைபாடி இன்புறுத்தி எழச் செய்தல்
இறைமைச் செயல் அல்லவோ!

வலிய பாறையையும் துளைத்துப் புகுந்து
ஈரத்தை எடுத்து வாழும் வேரின் வாழ்க்கை

வெற்றிவாழ்க்கை அல்லவா! முட்டி மோதாமல் ஒட்டி வளைந்து உயர்வு எய்துகிறதே வேர்! எண்ணிப் பார்த்து ஏற்றது புரிக என்பது இப்பாடல் உள்ளுறை.

பாடல் முழுமையும்:

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ? வன்செவியோ நின் செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என் னேயென்னே!
ஈதேஎம் தோழி பரிசேலோர் எம்பாவாய்!

2.பாசம் பரஞ்சோதி

எனக்குப்பற்றாவது ஒன்றே ஒன்று. அவ் வொன்று பரஞ்சோதியாம் முழுமுதல் சிவமேயாம் என்பது, பாசம் பரஞ்சோதி என்பதன் பொருளாம்.

தேர்ந்து தேர்ந்து மனத்துக் கினியவே அணியும் அணிகளை உடையவளே, நீ சொல்வது என்ன? ஒரு பொழுதில் இரவு பகல் என இரண்டு உண்டே! இரண்டு பொழுதிலும் இடையீடு படாது நீ சொல்வது என்ன?

'பாசம் பரஞ்சோதிக்கே' என்று கூறுவாய்!

அப்படிக் கூறும் நீ பரஞ்சோதியைப் பேசுவது எப்போது? இப்படி உறங்கிக் கிடந்தால், நாங்கள் எழுப்பவும் எழும்பாமல் - உறங்கிக் கிடந்தால் - நாம் நன்றாக அப்பரஞ்சோதியைப் பேசுவது எப்போது!

நீ மலர் பரப்பிய மெல்லிய நறுமணப் படுக்கையையே நேசப் பொருளாக்கி நெட்டுறக்கம் கொண்டாயோ? என்றனர் எழுப்ப வந்த பாவையர்.

'பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதுஇப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ, நேரிழையாய்'

உறங்கிக் கிடந்த பாவை, உறங்கியா கிடந்தாள்? உரைப்பவற்றைத்தன் செவியைக் கூர்மையாக்கிக் கேட்கவே செய்தாள்.

நீங்கள் என்ன பாசம் வைத்தீர்கள்? என்ன பற்று வைத்தீர்கள்? அணிகலத்தின் மீதே பாசமும் பற்றும் வைத்துள்ளேன் என்கிறீர்களே, நீங்கள் மட்டும் என்னவாம்? என்னினும் குறையாமல் பூட்டியும் புனைந்தும் கொண்டுதானே இப்படி இகழ்ந்து பேசுகிறீர்கள்? உங்களை நினைத்துக் கொண்டு பேசுகிறீர்களா? பிறரை இகழுமுன் அவ்விகழ்ச்சி நம்மிடம் இல்லையா என்று எண்ணாமல் பேசி விடலாமா? உங்கள் பேச்சு வெறுக்கத் தக்கது! இப்படியும் சில சிறு குணங்கள் உங்களுக்கு எப்படித்தான் ஏற்பட்டு விட்டனவோ?

விளையாட்டுக் களம். விளையாட்டு நேரம் - விளையாட்டுக் கூட்டம் இதுவோ? ஏசிப் பழிக்கும் பகையான இடமும் இதுவோ? உள்கி உள்கி உருகி நிற்குமிடத்தே விளையாட்டு என்ன? வேடிக்கை என்ன? எள்ளல் என்ன? இகழ்ச்சி என்ன? பொருந்தா தனவற்றைப் பேசிப் பொழுதைக் கெடாதீர்! புகழைக் கெடாதீர்! என்றாள்.

“நேரிழையீர்?
சீசீ இவையும் சிலவோ! விளையாடி
ஏசுமிடம் ஈதோ!”

மேலும் அவள் கூறுகிறாள்.

வானுயர்ந்த நிலையராய்த் தேனுயர்ந்த சொல்லராய் ஊனுருகி உள்கும் உளத்தராய் அமைந்தார்தாமும், எப்படி எடுப்போம், எப்படித் தொடுப்போம், எப்படி முடிப்போம்

என்பதை முடிவு செய்ய முடியாமல் முடிவிலாப் பரம் பொருளின் புகழ்த் திருவடியை எப்படிப் பாடுவேம் எப்படிப் பரவுவேம் எது செய்வேம் எனத் தெரியாராய்த்திகைப்புற்று வாழ்த்த வந்த வாய் வாழ்த்த இயலாமல் நாணிக் குறுகி மூடிக்கிடக்கும். திருமலரடிச் செம்பொருள், அவர்கள் நிலையை நினைந்து, தாமே உருகி அவர்களுக்கு எளிவந்து உதவ முந்து முந்து நிற்கும்!

ஒளி என்றால் அதுவே ஒளி! அமைதி என்றால் அதுவே அமைதி! சார்ந்தவை எல்லாம் தன்னொளியும் தன் அமைதியும் கொண்டு விட அருளும் கொடையாளன்! அவன் தன்னைக் காணக் கருதுவார் கண்காணக் கண்டு களிக்கப் பேரம்பலமாம் விண்ணில் இருந்து இழிந்து சிற்றம்பலத்து வந்து இறைக் கோலம் கொண்டான். அவன் அடிக்கே அடிமை பூண்டு கிடப்பேம் யாம்! நமக்குள் என்னே ஏற்ற இறக்கம்! ஏச்சு பேச்சு! சிவ ஒளியும் சிவ அமைதியும் கொண்ட சிவ நிலைப் பேற்றில் கட்டுண்டு திளைப்பதே பிறவிப்பேறு! என்றாள்.

விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம் பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆடேரலோர் எம்பாவாய்!

"இறையடி வேண்டி உருகி நிற்பார் உரையாடவும் இயலார்; அவர்நிலை கண்டேனும் உணர்ந்து பற்றிக் கொள்ள வேண்டாவோ! உரைப்பது என்ன? எள்ளுவது என்ன? இகழ்வது என்ன? விளையாட்டு என்ன? வாதாட்டு என்ன? "தந்தருள வந்தருளும்" பெருமான் அவன்.

துய்க்க வேண்டிய தூய நிலையில் தொடரலாமா போலிமைகள்! என்பது இப்பாடல் உள்ளுறையாம்!

முழுதுறுபாட்டு:

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர்,
சீசி இவையும் சிலவோ! விளையாடி
ஏசு மிடமீதோ! விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆடேலோர் எம்பாவாய்!

3. முத்தன்ன வெண்ணகையாயி

"எம் உள்ளங்கவர்ந்து அள்ளூறி நிற்கும் பாவையே,"

நீ கதவை மூடி, போர்வையை மூடி, கண்ணிமை மூடிக் கட்டிலிலே படுத்திருக்கிறாய் இத்தனை மூடுதல் இடையேயும் நீ முன்னே நின்று முத்தையும் வெல்லும் பல்லை மெல்லக் காட்டிப் புன்முறுவல் செய்யும் அழகு எங்கள் கண்ணில் பட்டுக் கவர்ந்து மயக்குகின்றது. ஆனால் கண்ணைத் திறந்து கடமைகளை முடித்து ஒப்பனை எல்லாம் செய்து கொண்டு கதவைத் திறந்து காத்துக் கிடக்கும் எங்களுக்கு முன்னாக வந்து, என் அப்பன் என் இனியன் என் உயிர்தளிர்க்க வைக்கும் அமுதன் என்று உள்ளமெலாம் உவப்பு ஊற்றெடுத்து மடை போல் பாய இனிக்க இனிக்கப் பேசுவாய்! உன்னைப் பற்றி அறிய மாட்டோமா? அது கிடக்கட்டும்; இப்பொழுது உன் வாயிலில் நின்று உன் வரவு பார்த்துக் கிடக்கிறோம்; இப்பொழுது வந்தேனும் கதவைத் திறந்து காட்சிக்கோலம் காட்டுவாயாக என்கின்றனர். "பாவை பாடும் செல்வியர்கள்!"

உள்ளே இருந்தவள் உறங்கிக் கிடந்தாள் அல்லள்; அவர்கள் கூவி அழைத்தது கேளாதவளும் அல்லள். அதனால், அவர்கள்,

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்; வந்துன் கடைதிறவாய்

என்ற அளவிலேயே, கதவைத் திறக்கு முன்னரே,

"பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால் பொல்லாதோ"

என்று மறு மொழி கூறினாள்.

அடியார்களுக்குரிய அகத்திலக்கணமாம் சிவபெருமான் புகழ் நினைதல், கழுத்து விம்மல், நாவு தழுதழுத்தல், இதழ் துடித்தல், உடல் குலுங்கல், மயிர் சில்லிடல், வியர்த்தல் சொல்வாராமை, கண்ணீர் அரும்பல், வாய்விட்டழுதல், மெய்ம் மறத்தல் என்னும் பத்தும், புறத்திலக்கணமாம் திருநீறு உருத்திராக்கம் அணிதல், பெரியோரை வணங்கல், பெருமான் புகழ்பாடுதல், திருப்பெயர் கூறல், வழிபாடு செய்தல், அறங்கள் புரிதல், தொன்மம் (புராணம்) கேட்டல், ஆலய வழிபாடு செய்தல், சிவனடியாரிடத்து அன்றிப் பிறிதிடத்து உண்ணாமை, அடியார்க்கு வேண்டுவ வழங்கல் என்னும் பத்தும் குறையாமல் கொண்டவர்கள் நீங்கள்!

இறையடியை உள்கி உள்கி உருகி நிற்றலில் தழும் பேறிப் போய பழமை அடியவர்களும் நீங்கள்!

எங்கெங்கு எவரெவரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், என்னென்ன செய்தல் வேண்டும், எவ்வெவற்றைச் செய்தல் ஆகாது என்பவற்றை எல்லாம் பழுதற அறிந்து கடைப் பிடிக்கும் பெருமையீர்!

என் போன்றவர்கள் உங்களைப் போலப் பழமைப் பட்டு ஒழுக வல்ல பாங்கு அறியாப் புதுவரவினர் தாம்! ஆதலால் எங்களிடம் உங்களைப் போல நிறையைக் காணக் கருதாமல் எங்கள் குறைகளைத்தீர்த்துளம்மையும் உங்களொடு சேர்த்து ஆட்கொண்டருள வேண்டும்!

யாம் வேண்டும் இவ்வேண்டுதல் குற்றம் குறையுடை தாகுமோ, பெருமை, பெருமிதம் இல்லாமல் அரவணைத்து அருள்புரிவது அல்லவா; திருவருள் புரிக என்றாள்

பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மை தீர்த் தாட்கொண்டால் பொல்லாதோ?

என்றதைக் கேட்டவர்கள்; இது எள்ளலா? நகையாடலா? என எண்ணி,

எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ? என்றனர்.

என்னே என்னே உன் அன்பு! நீ சொல்லித் தானா நாங்கள் தெரிய வேண்டும்; தெரிந்த செய்தி தானே என நினைந்து பொதுமையராய்.

"சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை" என்றார்.

பழமை என்ன புதுமை என்ன உள்ளத் தூய்மையும் நிறைவும் உடையவர் எவராயினும் நம்பெருமானைப் பாடிப் பரவத் தவறுவரோ என்றதால்,

"இத்தனையும் வேண்டும் எனக்கு"

என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள்!

பழவடியார் புத்தடியார்க்கு நெறிகாட்டி அழைத்துச் செல்லுதல் வழிபாடு வழிவழிச் சிறக்க வழி என்னும் உள்ளுறை யுடையது இப்பாடல்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றுள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்! வந்துன் கடைதிறவாய்!
பத்துடையீர் ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால் பொல்லாதோ?
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்!

4. ஒண் நித்தில நகையாய்

தாம் அழைக்கக் குழுவாக வந்தும் உறக்கம் நீங்கி இன்னும் எழும்பாமல் இருக்கும் தோழியைக் கூவி அழைக் கிறார்கள்.

இவளென்ன இன்னும் எழுப்பக் கூட இல்லை. இப்படி ஒவ்வொருவரும் உறங்கிக் கிடந்து போய்ப்போய் அழைத்து, ஒன்றாகிப் போய்ப் பாவை பாடுவது எப்படி? நாமே அறிந்து முன்னிருக்க வேண்டாமா? நம்மை யார் வந்து எழுப்பினார்? நாமாக எழுந்தோம் இல்லையா? என எண்ணிக் கொண்டே,

"ஒண் நித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ?"

என்கின்றனர். ஒளி விடும் முத்துப் போலப்பல்லை விளக்கிப் பளிச்சிடச் செய்யவல்ல நீ, உலகமே விழித்து உயிரெலாம் விழித்து உலாக் கொள்ளக் காலைச் கதிரவன் கண்ணொளி திறந்தானே! அதற்கு முன் விடிவெள்ளி எழுந்து எவ்வளவு பொழுதாயிற்று? இன்னும் விடியவில்லை என்றா எண்ணிக் கொண்டிருக்கிறாய்? இவ்வாறு விளித்தழைக்க, வீட்டுள் இருந்து அச் செல்வி வாராமல் ஒலி வந்தது.

"வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?"

நான் மட்டும் தான் வரவில்லையா? நான் மட்டும் தான் விடியவில்லை மெல்ல எழுந்திருக்கலாம் என்று நினைக்கிறேனோ? வரவேண்டிய எல்லாருமா வந்து விட்டனர்? வாராதார் எவரும் இலரா? அழகிய வண்ணக் கிளிபோலத் தோற்றமும் சொன்னதே சொல்லும் மழலையும் உடைய கிளிபோன்ற நீங்கள், உங்களை எண்ணிப்பார்த்தீர்களா? எல்லாரும் வந்து விட்டார் என்றால் சொல்லுங்கள் என்பாள் போல் சொல்ல எழுப்புகின்ற ஏந்திழைச் செல்வியர்கள்

"எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம்"

என்றனர். எண்ணாமல் நாங்கள் சொல்லவில்லை. எண்ணிக் கொண்டு தான் உண்மையாகச் சொல்கிறோம்! நாங்கள் உள்ளவாறு சொல்லவில்லை என்று ஐயம் உனக்கு வந்து விட்டதா? யாரையும் எண்ண மாட்டோம். அப்படி எண்ணிப் பார்த்து வீணில் பொழுதைப் போக்குவதா எம் வேலை?

எப்படிப்பட்ட பொன்னான வேளை இது! கண்ணை மூடி வீணாய் உறங்கிப் பொழுதைக் கெடுக்கும் பொழுதா இது?

விண்ணவர்க்கு அமுதம் தந்த அருமருந்தனைய பெருமானை, நான்மறையின் மெய்ப்பொருளாய் விளங்கும் விழுமியனை, காணும் கண்ணுக்கு அவனை அன்றி இன்பந்தாரா ஒருவனை, பரவிப் பரவி உள்ளம் நெக்கு நெக்குருகிக் கண்ணீர் வழிய நின்று உருக வேண்டிய போதில் தலையை எண்ணிக் கொண்டிருப்பதா எங்கள் வேலை?

எவர் வந்தார்? எவர் வரவில்லை? எத்தனைபேர் வந்தார்? எத்தனை பேர் வரவில்லை? ஏன் வரவில்லை?

இப்படி இப்படி எண்ணிக் கொண்டு தவப் பொழுதை அவப்பொழுது ஆக்கமாட்டோம். உனக்கு ஐயம் உண்டானால் வா; வந்து எண்ணிப் பார்த்துக் கொள் எண்ணிக்கை குறைந்தால் மீளப்போய் உறங்கு என்பாராய்.

அவ்வளவும்
எண்ணித் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் களித்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம்; நீயே வந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்!

என்றனர்.

"அன்பர் ஒருவரை அன்பர் ஆயுதல் ஆகாது, ஆரோ ஒருவர் வரவில்லை என்பதைச் சாக்கிட்டுத் தம் வாராமைக்குக் காரணம் காட்டக் கூடாது. இறைமை அன்பில் தோய்ந்தவர் அடுத்தவர் இறைமை உணர்வை ஆராய்ந்து கொண்டிருந்தால் தம் இறைமைப் பொழுதை வாளா கழித்து அவப்பொழுது ஆக்கிவிட்ட குற்றம் சேரும்! அவ்வவர் கடப்பாட்டைச் செவ்விதில் செய்வதை விடுத்து ஏசலிப்புக் காட்டல் இறைமை இன்பந் தோய்ந்திருக்கச் செய்யாது" என்னும் உள்ளுறைகளைக் கொண்டது இப்பாட்டு.

உண்ணெக்கு உருக வேண்டி நிற்கும்யாம் நீ கூறிய வாறு வீணே எண்ணிக் கொண்டிருக்க மாட்டோம்! அதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றால் எண்ணிப் பார்த்துக் கொள்! அவ் வெண்ணிக்கை குறைந்தால் மீளவும் போய்ப் படுத்து உறங்கு! அவரிடம் இறைமை உணர்வில்லை;

எனக்கு இல்லாது போனால் என்ன குற்றம்? இந்தக் கூட்டல் கழித்தல் கணக்கு வேலை உடையான் மேல் கொள்ளும் அன்புக்கு உடையது ஆகாது என்னும் எண்ணம் அடியார்க்கு ஏற்பட்டுச்சமயப் பிடிப்பே குறியாய் இல்லாமல் சால்புப் பரப்பே பரப்பெனக் கொண்டிருப்பின் சமய உலகம் சால்புலகமாக வழிகாட்டியிருந்திருக்கும்! சமய உலகம் சண்டை உலகமாக இருந்திருக்காது!

வழிபடுகிறாயா? வழிபடவில்லையா? அதன் நிறை குறையை நீ பார்க்க என்ன அதிகாரம்? அவன் பார்த்துக் கொள்ளட்டுமே!

ஒண்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
எண்ணித் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் களித்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம்! நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்!

5. மாலறியா நான்முகனும் காணா

நறுமண மிக்க கூந்தலையுடையாய், நின் அழகிய நிலை இருந்தவாறு என்னே! என்னே! நாளும் நாளும் படிந்து கிடக்கும் மாசே வடிவாகிப் போன பொய்மைப் பேச்சுத்தான் என்னே! என்னே!

தற்செருக்கும் தன்னுடைமைச் செருக்கும் தக்கவர்க்கு உண்டாதல் உண்டோ? செருக்கு அற்றுப் போனார்க்கு அல்லவோ செம்மேனி அம்மான் கேளாதே புகுந்து கிடைத் தற்கரிய இன்பத்தை நல்குவான்!

மண்ணுள் ஆழ்ந்து ஆழ்ந்து சென்றாலும் விண்ணில் உயர்ந்து உயர்ந்து சென்றாலும் அடியும் முடியும் காண முடியா வான்மலை அல்லவோ செம்பொருட் சிவம்!

அதனை அகழ்ந்து அகழ்ந்து செல்லும் பன்றியால் கண்டடையவோ முடியும்? உயர்ந்து உயர்ந்து பறக்கும் பறவையால் எட்டவோ முடியும்?

தோற்றுப் போகும் முயற்சி எனத் துலங்காதவர் கொண்ட முயற்சி அது. அத்தோற்றுப் போகும் முயற்சியையே நீயும் கொண்டுள்ளாய்!

நீ என்ன தான் வெற்றி பெறுவாய்?

நான் எளிமையாய் அச்செம்மணி மலையின் அடியும் முடியும் அறிவேன் என்று செய்யாத கற்பனைகள் செய்து தேனும் பாலும் வழிவது போலத் தித்திக்கும் பொய்களையே பேசுகின்றாய்! உன் பெயர் 'படிறி' எனவே கொண்டு எங்களை அழைக்கவைக்கின்றாயே அப் பெயரால்? வா. வா மற்றவை கிடக்கட்டும்! உன் கதவை முதலாவதாகத் திறப்பாயாக! காத்துக் கிடக்கிறோம் என்பதை எண்ணியாவது திறப்பாயாக!!

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடை திறவாய்;

இறைவன் ஒருருவனா, ஒரு பெயரனா? அவன் இங்கு இருப்பவனா? அங்கு இருப்பவனா? காலக் கட்டு உடையவனா? என்ன வினாக்கள் இவை? உலகங்கள் எத்தனை? அத்தனையும் அவனே! விண்ணகப் பரப்பு எவ்வளவு? அளவிடுவார் எவர்? விண்ணகப் பரப் பெல்லாம் அவனே!

மண்ணும் விண்ணும் மட்டுமோ உலக மூலங்கள்? நீரென்ன, தீயென்ன, வெளியென்ன, எல்லாமும் அவனே அல்லவோ! அறிந்துள்ள இவற்றுள் அடங்கி விடுவனோ? அறிவென்ன அறிவு? அறிவின் எல்லைக்குள் அகப்பட்டு நிற்பனோ அவன்?

ஞாலமே! விண்ணே! பிறவே! அறிவரியான்! அவன் தோற்ற மென்ன? பொலிவென்ன? அவன் அருட் பேறென்ன? ஆட்கொள்ளும் அருமை என்ன?

ஒரு தாய் தன் குழந்தையைத் தூக்கி எடுத்து அரவணைத்து நீராட்டுவது மட்டுமா? மூக்கை வழித்து, நாவை வழித்து, காதைத் துளாவி, கண்ணை வருடி, தலையைத் தழுவி, காலைக் கையை வருடி வருடி மாசுகள் அகற்றிய அளவில் நில்லாமல் நறுமணக் கலவை தடவி உச்சி முகர்ந்து உள்ளந் தளிர்ப்பது போல அடியார் மாசுகள் அனைத்தும் களைந்து மாசு மறுவற்ற பொன்னாக்கிப் பூரிக்கும் பெருமான் அல்லனோ நம் பெருமான்! அவன் பண்புகள் எவை? எவை? பரிவுதான் எத்தகையது? இவற்றைப் பரவிப் பரவி அடியார்கள் தோற்றுப் போனதை அல்லாமல் முற்ற முடியக் கூறி வெற்றியுற்றவர் உண்டோ? அவ்வாறாகவும், உறக்கமே பேரின்பமாக உடலோம்பலும் உளம்இனிக்கப் பேசுதலும் இல்லாத பொல்லாத எண்ணமும் செருக்கும் உடைய நீ, ஆயிரம் ஆயிரம்முறை 'சிவனே! சிவனே!' என்று ஓலமிட்டுக் கிடந்தாலும் உணர்ந்து கொள்ள மாட்டாய்! கட்டாயம் உணர்ந்து கொள்ள மாட்டாய்! முழுதுறு ஒப்படைப்பு இல்லா மூடம் முழுமுதலைக் கூவி விட்டால் மட்டும் முன்வந்து நின்று விடுமோ? உன் செயல் அழகிதாம்!

கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்
றோலம் இடினும் உணராய்! உணராய் காண்!
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

உள்ளம் உருகி ஊற்றுக்கண் எடுக்க அள்ளூறி நிற்கும் அன்பர்க்கும் அடைய அரிய பொருள் தற்செருக்கர்க்கும் தற்பற்றர்க்கும் அடையும் பொருள் ஆகிவிடுமோ? செருக் கறுத்தாரைச் சேரும் பொருளே சிவம் என்பது உள்ளுறையாம்.

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்;
ஞாலமே! விண்ணே! பிறவே! அறிவரியான்!
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்
றோலம் இடினும் உணராய்! உணராய் காண்!
ஏலக் குழலி! பரிசேலோர் எம்பாவாய்!

6. மானே நீ நென்னலை

மான்போன்றவளே, பொருந்தும்; மிகப் பொருந்தும்; உன் விழி மான் விழி! உன் துள்ளல் நடையும் ஓட்டமும் மான் துள்ளல் ஓட்டமும்! உன் அழகு மானின் கொள்ளை அழகு! அதிலும் அழகு, நீ என்ன நேற்றுச் சொன்னாய்? அந்த நினைவாவது உண்டா?

நேற்று நாங்கள் வந்து கூவிக்கூவி அழைத்தும் கட்டில் இன்பத்திலேயே கலந்து கிடந்த நீ கதவைத் திறந்து வந்து எங்களைக் கண்ட அளவிலே தேன் சொட்டுவது போல என்ன சொன்னாய்?

உன் துள்ளு நோக்கில் மறந்து போயிருப்பாய்! கேள்! இன்று வந்து நீங்கள் எழுப்புமாறு இருந்தபடி நாளை இரேன்; இரேன்! நாளை நானே முந்து வந்து உங்கள் முற்றத்து நின்று உறங்கிக் கிடக்கும் உங்களை எழுப்புவேன் என்றாயே! அந்த அழகுதான் இதுவா?

சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியா வகையில் என்ன தான் செய்தாய்? எங்கே தான் அலைந்தாய்? சொன்ன சொல்லைக் காப்பாற்ற வில்லையே என்ற நாணமாவது உனக்கு உண்டாயிற்றா? இன்னும் விடியவில்லை என்று தான்

எண்ணிக் கொண்டு கட்டிலில் உருண்டு புரண்டு கிடக் கிறாயோ?

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய், இன்னம் புலர்ந்தின்றோ?

வானும் அவன்; நிலமும் அவன்; ஒளியும் அவன்; வளியும் அவன்; நீரும் அவன்; எல்லாம் அவன்; அறிவார் என்ன அறிந்தாலும் அறிவதற்கு அரியவன் அவன். அத்தகையன், தானே வந்தான்; ஆம்; எம்மைத் தேடித் தானே வந்தான்; எங்கள் பால் காட்டரிய அருளைக் காட்டினான்; வேறு எதற்கும் அடிமைப்பட்டுப் போகாமல் அவனையே பொருளாகக் கொண்டு வாழும் வகையில் ஆட்கொண்டான். அவன்தன் மேலுக்கு மேலாம் திருவடிகளை யாம் பாடி வந்தோம்; அவ்வாறாகியும் ஒரு சொல் சொல்லாய்; வாயில் திறவாய்; இம்மட்டோ? ஊனாய், உயிராய், உணர்வாய் ஒன்றி விடும் பெருமானின் உண்மை உணர்ந்து உன் ஊன் உருகாய் உறங்கிக் கிடக்கின்றாய்; இச்செயல்கள் எல்லாம் பிறர் எவர்க்கு ஆகும்? உனக்கே உரிமையாய்ப் போய் விட்டவையாம்;

ஆனாலும் என்ன? எமக்கு மட்டும் தானா பெருமான் உரியன்? வேறு எவ்வெவ்வாறு எண்ணிக் கிடந்தாலும் சொல்லித் திரிந்தாலும் எவ்வெக் கோலம் கொண்டாலும் அவர்களுக்கெல்லாம் தனக்கே இயல்பான பேரருள் பெருக்கால் அருள்புரிவான் அவன்! ஆதலால் உனக்கும் அருள்புரியவே செய்வான்! இப்பொழுதேனும் எழுந்துவா; எங்களோடு கூடி நின்று இறையருளை வேண்டிக் கொண்டு நலங்களை எல்லாம் பெறுவாயாக!

வானே, நிலனே, பிறவே, அறிவரியான்
தானே வந்து தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்!
ஊனே உருகாய் உனக்கே உறும்; எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

"தம்வாய்ச் சொல்லைக் காப்பாற்றவும் மாட்டார் தாமா, வாய்மைப் பொருளைக் கண்டு அதன் அருளுக்கு ஆளாவர்? ஆகார்; வாய்ச்சொல் வாய்மையாக வாழ்க! வாய்மைப் பொருள் கடவாமலே கூடிவந்து நிற்கும்" என்பது இதன் உள்ளுறையாம்.

'வானே நிலனே பிறவே அறிவரியான்'

என்னும் இறை இலக்கணம் முற்பாட்டிலும்

'ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்'

என வந்ததை உணர்க.

எல்லாம் அவனாக இருக்க, 'நான் என்ன என்ன உண்டு? என்பதைப் பல்கால் எண்ணிப் பயிலக் கூறிய 'கூறியது கூறலாம்'

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய்; இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய்! உனக்கே உறும்! எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

7. 'அன்னே இவையும் சிலவோ?'

"எங்களுக்கெல்லாம் இனிய வழிகாட்டியாம் அன்னை போன்றவளே, உன்னிடமா இது? எண்ணிப் பார்க்க முடியாத இயல்புகளும் சில உன்னிடம் உண்டுபோலும்!

இதற்கு முன்னெல்லாம் எப்படி இருந்தாய்?"

அமரவாழ்வினர் எனப்படுவார் அனைவரும் கால மெல்லாம் எண்ணினாலும் எண்ணி முடித்தற்கு அரியவனாம் பெரியன்; ஒப்பற்றவன்; புகழின் எல்லைக்கும் அப்பாலாய் ஓங்கி உயர்ந்தவன்; அவன் திருக்கோயில் சின்னங்கள் ஒருங்கே முழங்கும் ஒலிகேட்ட அளவிலேயே 'சிவ சிவ' 'சிவ சிவ' என்றே வாய்ததும்பி நிரம்பிக் கூறுகின்றவள் நீ! தென் பாண்டி நாட்டானே, தென்னவனே என்று அடியார்கள் முழங்கு முன்னரே அனலை அடுத்த மெழுகே போல உருகி உருகிக் கண்ணீர் உகுப்பவள் நீ!

ஆனால் இன்று என்ன ஆனாய்?

நாங்கள் தனித்தனியே எம்மை ஆட்கொண்ட பெரு மானே! எம்மை ஆண்டருளும் அரசனே, எமக்கு எண்ணு தோறும் எண்ணுதோறும் இன்பச் சுரப்பாக இருக்கும் இனிய அமிழ்து போன்றவனே, என்று எல்லோரும் கூறினோமே.

இவற்றை நீ கேட்டாய் இல்லையோ? கேளாமலே உறங்கு கின்றாயோ? என்றும் இல்லாத வன்னெஞ்சம் உனக்கு எப்படி வந்தது? ஆம்! கல்லினும் இரும்பினும் வலிய உருக்கினும் வன்மையான நெஞ்சம் உடையவர் கூட்டில் சேர்ந்து விட்டவள் போல் சிறிதும் அசைவற்று வாய்ச் சொல் அற்றுப் படுக்கையில் கிடக்கின்றாய்! ஈசன் அடியார்க்கு இப்படியும் உறக்கம் வருமோ? எப்பொழுது திருவருட் பேறு வந்து வாய்க்கும்? இப்பொழுது, இன்னும் சற்றே பொழுது போகியா? நாளையா என்பது அறியாராய் எப்பொழுதும் எதிர் பார்த்து நிற்பார் அல்லரோ இறையடியார்! உன் உறக்கப் பெருமையே பெருமை! உறக்கத்தில் ஒரு போட்டி வைத்தால் உலகப் பரிசு உனக்கே தான் போலும்! உறக்கம் விட்டு எழும்பி எங்களோடு வந்து கூடி இறையருளில் தோய்வாயாக!

அன்னே இவையும் சிலவோ? பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்;
தென்னா என் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்;
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய்; இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்;
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்!

படுத்துக்கிடக்கும் பாவை பரிவற்றாள் அல்லன்; பாவையர் பாராட்டும் பாவையாய் அன்னையாய்த் திகழ்பவள். மற்றைப் பாவையரினும் பெருமான் மேல் பேரன்பு மிக்காள்! பெருமான் புகழிசைக்குச் செவியைத் தீட்டி வைத்துக் கேட்ட

அளவில் கண்ணீர் வார, மெய்ம்மயிர் பொடிப்ப, நெக்கு நெக்குருகும் நெஞ்சுடையவள். இத்தன்மைகள் எல்லாமும் இவளுக்கு முன்னரே உளதாகி இருத்தலைக் கண்டறிந்தவர் களே அவளை எழுப்ப வந்த பாவையர்.

ஏறுக்கு மாறாக, முன்னுக்குப் பின்னாக, எதிர் பார்ப்பு ஏமாற்றமாக ஏதேனும் ஒரு காரணம் வேண்டுமே! ஒருவேளை அது வன்னெஞ்சர் கூட்டாக இருக்குமோ? இனம் இனத்தோடு சேர்தல் இயற்கை அல்லவோ என எண்ணுகின்றனர். திருக்கோயில் முழக்கத்திலேயே தன்னை மறந்து உருகுபவள். தெரு முழக்கம் கேட்ட அளவிலேயே அம்முழக்க வயப்பட்டு மயங்குபவள், தலைவாயில் கதவை அடுத்து வந்து பெருமானின் எடுத்த புகழ்களை எல்லாம் தொடுத்துத் தொடுத்துப் பலரும் கூடியாக்கிய தொடையல் போலப் பாடிப் பரவிய மொழி அவளைச் செயலறச் செய்து விட்டதாம்! செயல் மறந்து தன் இயல் மறந்து - அவனே ஆகிவிட்ட நிலையில் அவள் கிடக்கிறாள். அவ்வறிதுயில் எள்ளல் பரிசு அன்று! எவரும் கொள்ள அரிய பரிசாய் ஓங்கு கின்றதாம்!

> “இறைவன் புகழ்கேட்கத் தாம் அப்புகழேயாக ஒன்றிவிடும்
> உணர்வே மெய்யடியார் நிலையாம்”

என்பது இதன் உள்ளுறையாம்!

8. கோழி சிலம்ப

தோழியே வாழ்வாயாக; உன் செவிகளில் கோழி கூவும் ஒலி கேட்கவில்லையோ! அவ்வொலி கேட்ட மற்றைப் பறவை இனங்கள் ஒலி எழுப்பலும் கேட்டிலையோ?

பறவை எழும்பி ஒலி எழுப்பிய அளவில் இறையடித் தொண்டர்கள் எழும்பிச் சங்கொலி எழுப்புதல் எங்கெங்கும் கேட்க வில்லையா? ஒப்பற்ற பேரொளியும் ஒப்பற்ற பேருளும் உடைய ஒப்பற்ற பரம்பொருளைப் பற்றி நாங்கள் பாடிக் கொண்டுள்ளோமே; தெருத் தெருவாய் ஒலித்து உன் வீட்டு முற்றத்தும் ஒலித்தும் உன் செவிகளில் ஏறவில்லையா?

உன் உறக்கம் தான் என்ன உறக்கம்? இப்படி உறங்கு வார் உன்னை ஒழிய ஒருவரைக் கண்டோமில்லையே! உறக்கம் சற்றே கலைந்தாலும் எழுந்திருக்க எண்ணமே இல்லையா? எழுந்திருக்க முடியா மடிமை உன்னைக் கிடத்தினாலும் வாயைத் திறக்கவுமா முடியாது?

உண்மை உறக்கம் ஒரு சிறு அசைவாலும் எழும்பி விடும். உறங்குவது போல நடிக்கும் பொய்யுறக்கம் தான், என்ன என்ன பாடுபடுத்தினாலும் எழும்பாது கிடக்கும்! அப்படிப் பொய் நடிப்புக் கொண்டு விட்டாயா?

திருமாலுக்கு ஆழிப்படை (சக்கரம்) வேண்டியிருந்தது. அவ்வாழிப்படை பெறுதற்குப் பெருமானை அடுத்து வழி பட்டான். மலர் தூவி வழிபடுதற்குச் செடி கொடிகளைத் தேடிச் செல்லாமல் தன் கண்ணையே பறித்து மலராகத் தூவினான் என்னும் கதையை அறிந்துள்ளாய் தானே!

அத்தகைய செயற்கரிய செயலைச் செய்தல்லவோ ஆழிப் படையைப் பெற்றான்!

அரும்பெரும் பேறு பெறுதற்குக் கொடுக்கும் பொருளின் மதிப்புக்கு எல்லை தான் என்ன? ஆழியான் போலவோ அருளைப் பெறுதற்குரிய பெரிய பொருளைக் கொடுக்கப் போகிறாய்? உன் இறையன்புதான் என்ன அன்போ?

எல்லாமும் அழிந்தாலும் அழிவிலா முழுமுதல்வனை, ஒப்பிலா ஒருவனை, பெண்ணை ஒருபால் கொண்ட பேரருள் பெருமானைப் பாட வா என்று தானே உன்னை அழைக் கின்றோம்! வேறு என்ன செய்ய அழைக்கின்றோம்; எங்களோடு வந்து சேர்.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்; கேட்டிலையோ?
வாழி ஈதென்ன உறக்கமோ? வாய்திறவாய்;
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்!

கோழி கூவுதல்; பறவைகள் ஒலித்தல்; சங்கம் முழங்கல்; ஓரிடத்து - ஒரு வீட்டில் - என இல்லாமல், எங்கெங்கும் இவை கேட்டும் எழாமை என்ன?

வீதி வீதியாய்ப் பாடியும், வீடு வீடாய்த் தேடியும் நாங்கள் கூடி ஒலிக்கும் ஒலி கதவை முட்டிக் கொண்டிருந்தும் காதை முட்டாதிருக்கும் கதைதான் என்ன?

அன்புடையாய் நீ! அறிவோம்! அவ்வன்புடைமை அடையாளம் என்ன? அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு அல்லரோ? அப்பிறர் தாம் எத்தகையர்? ஊழி முதல்வர்! ஒப்பிலா ஒருவர்! அம்மை அப்பர்! அவர்க்கு அன்பு செலுத்திப் பாடவுமா வரக் கூடாது; வந்து சேர் என்கின்றனர்.

அவள் உடனே எழும்பி வந்து விட்டால், இவர்கள் அன்பு வெள்ளப் பெருக்கை அளவிட்டுக் காணக் கருவி என்ன? அக்கருவி அவர்கள் உள்ளார்ந்த உரையே ஆதலால் உள்ளிருந்து உரை முடியக் கேட்டு உடனாகினாள் ஆம்.

> "அன்பின் வழியதே உயிர்நிலை; அவ்வுயிர் நிலையே இறைநிலை" என்பது இதன் உள்ளுறையாம்.

୨. முன்னைப் பழம் பொருட்கும்

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் போற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்;
அன்னவரே எம்கணவர் ஆவர்; அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்.

இன்றையது நேற்றையது, நேற்றையதற்கு முன்னையது, முன்னையதற்கு முன்னையது என்றால் எல்லா முன்னைப் பொருள்களுக்கும் முன்னைப் பரம் பொருள் இறையேயாம். தான் தோற்ற மில்லாத தொன்றாக இருந்து தோற்றுவ வெல்லாம் தோற்று வித்த ஒன்று அஃது ஆதலால் முன்னைப் பழம் பொருள்களுக்கெல்லாம் முன்னைப் பழம்பொருள் ஆயிற்று. தோற்றுவித்த அது தோன்றுவ தாயின் தோன்றியது அழிவுறும் அல்லவோ! அவ்வழிவிலா ஒன்று முழுமுதலாம்.

அம் முன்னைக்கு முன்னைப் பழம்பொருள் பின்னே பின்னே தோன்றுகின்ற புதுமைகளை யெல்லாம் தோற்றுவித்து

முன்னைத் தோற்ற மில்லாமை போலவே பின்னை அழிவும் அற்றதாம்!

எல்லாவற்றையும் தந்து எல்லாவற்றையும் ஒடுக்கும் அப்பொருள் முதலும் முடிவும் இல்லா ஒன்றாம்.

பரம்பொருளே, பெற்றியனே, உன்னருள் வேண்டித் தவங்கொண்டுள்ள நாங்கள் உன்னையே பெருமானாக என்றும் போற்றிக் கொண்டிருக்க வேண்டும். உன்னைப் போற்றிக் கொண்டிருக்க உன் சிறந்த அடிச்சியராகிய நாங்கள் பெரியார் சார்பு வேண்டியிருத்தலால் உன்னடியார் திருவடிச் சார்பே கொண்டு பணிந்து வணங்குவோம். அவ்வாறே நின் அடியார்க்கே ஆம் திருத்தொண்டுகள் திருப் பணிவிடைகள் செய்பவராக வாழ்வோம்.

அத்தகைய மெய்யடியார் பெருமையில் உறையும் அடிமைத் தொண்டில் ஈடுபட்டு நிற்பவரே எம் கணவராக வாய்க்க எம் உள்ளம் என்றும் விரும்பும்; அத்தகைய கணவர் எங்களுக்கு வாய்த்து அவர் இட்ட கட்டளைப்படியே செய்வனவெல்லாம் செம்பொருள் தொண்டாகக் கொண்டு செய்வோம். நாங்கள் கேட்டுக் கொள்கின்ற இவ்வகையிலே எமக்கு எம் பெருமானாகிய நீ அருள் செய்வாயே ஆனால், எக்குறையும் இல்லாமல் நின் திருவடியே தஞ்சமாய் வாழ்வோம்! பாவையராகிய யாங்கள் பரமனாகிய நின்னிடம் வேண்டும் பரிசு வேறு என்னவாக இருக்கமுடியும்? இப்பேறு களேயாம் அருள்வாயாக என வேண்டுகின்றனர்.

பாவை நோன்பு என்பது கன்னிப்பருவத்து மகளிர் இறையருள் வேட்டுச் செய்யும் நோன்பாகும். பாவையாகிய அவர்கள். மணலால் பாவை சமைத்து வழிபட்டு வருதல் நோக்கு யாது என்பதன் விளக்கம் இப்பாடலில் தரப்பட்டுள்ளது.

இறைவனே பெரியனே பெருமானே நின் அடியேம் நாங்கள். நின்னை நினைத்து அடித் தொண்டு செய்தலை நோக்காகக் கொண்டவர்கள். எங்கள் பிறவி நோக்கு எவ்வகை யாலும் இடர்ப்படாமல் நிறைவேற்றி வைக்க வேண்டிய அருளாளன் நீ. ஆதலில் உன் அடியாராகத் தம்மையாக்கிக் கொண்டவர் எவரோ அவரே எம்மையாளுடைய கணவராகவும் வாய்த்தல் வேண்டும். அவர்க்குத் தொண்டு பூண்ட அளவில் மட்டும் நின்று விடாமல் நின் அடியார் தொண்டும், நின் திருப்பணித் தொண்டும் குறைவறச் செய்ய அவ்வடியார் தாம் இசைந்து நிற்பர். 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்பது இயற்கையது. அவ்வகையில் சார்பு சீரிதாக அமைதல், சார்ந்த எமக்கும் எம் சால்புத் தொண்டுக்கும் ஏந்தாம்; இதனை அருள்க என வேண்டுகின்றனர்.

துறவர்க்கு அடியார் சார்பும், அடியார் திருக்கூட்டச் சார்பும் எவ்வாறு கட்டாயத் தேவையோ, அவ்வாறே இல்லறம் ஏற்கும் மகளிர்க்கும் அவர்கருத்தொடும் ஒத்த கணவர் வாய்த்தாலே தான் இருபாலும் ஒத்துத் தொண்டாற்ற முடியும் என்பது இதன் **உள்ளுறையாம்.**

10.பாதாளம் ஏழினும் கீழ்

பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்;
போதார் புனைமுடியும் எல்லாம் பொருள் முடிவே;
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்;
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன்; தொண்டருளன்;
கோதில் குலத்தான் தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்!
ஏதவன் ஊர்? ஏதவன் பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்!

திருக்கோயில் திருத்தொண்டுக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்ட கன்னிப் பெண்பிள்ளைகளை நோக்கிப் பாவை நோன்பு நோற்கும் செல்வியரை விளித்துப் பாடியது இது.

மாசு இல்லாமையே தனிப்பெருந்தகவாகக் கொண்டு திருக்கோயில் திருப்பணி யாற்றும் பேறுபெற்ற பெண் பிள்ளைகளே, பூதலமா இதன் கீழே இறங்கிச் செல்லும் எழுபடை நிலத்திற்கும் அடியில் சொல்லும் செல்லாத இடத்து ஊன்றி நிற்பது இறைவன் திருவடி அவன், கொன்றை முதலாம் மாலையணிந்த திருமுடியோ மேலே சென்று எப்பொருளுக்கும் மேலிட நிற்கும் நிலையது; செம்மேனி

அம்மானாம் பெருமான் ஒருவனா, இல்லை; அவனே தஞ்சமென்ப் பற்றிக் கொண்டிருக்கும் அம்மையை ஒரு பாகமாகக் கொண்ட இருவராம் ஒருவன்; அவன் திருவுடலம் அதனைக் காட்டும் மாதொரு பாகனாம் கோலம்; மறைகளின் முதலும் மூலமும் ஆனவன்; விண்ணுலகரும் மண்ணுலகரும் தம் புலமையாலும் புகலும் ஆர்வத்தாலும் எத்தனை எத்தனை புகழ்ந்து கூறினாலும் கூறி முடித்து விட முடியாத பெருமையன்; அடியார்க்கு அடியருளும் அருமைப் பெரியனாம் அவன், தோழனாக நின்றும், தொண்டருக்குத் தொண்டனாக இருந்தும் அரவணைப்பவன்.

இத்தகைய தன்மையனுக்கு ஊர்தான் எது? பேர் தான் எது? அவனுக்கு உற்றாராக இருப்பார் எவர்? அயலாராக நிற்பார் எவர்? அவனை எவ்வூரால், எவ்வுறவால், எவ் வாறாய்ப் பாட முடியும்? பாடும் வகையை அறியாமலே பாடி மகிழ்க்கிறோம் யாம். எம் அறியாமை இருந்தவாறே ஈதாம். இறைவன் அடியும் முடியும் அறிய வொண்ணாத ஆழத்தும் உயரத்தும் இருப்பவை. அவற்றைத் தேடி அளந்து அறுதியிட்டு உரைக்க வல்லார் எவர்?

அப்பனும் அம்மையும் தனித்தனி ஒருவன் ஒருத்தி அல்லர்! இருவராம் ஒருவர்!

அறிவு எப்படிப்பட்டது?

அறிதோறும் அறியாமை உடையது?

இறைவன் எழிலை - இயற்கை ஆற்றலை- அருளை - பிற பிறவற்றை அறிவுப் புலமாம் துலாக் கோல் கொண்டு நிறுத்துக் காட்டவோ, அளவு கோல் கொண்டு அளந்து

காட்டவோ எவர்க்கு இயலும்! ஏத்துவார் எவரெவர் எனினும் எய்த்து இளைத்துத் தோற்றுப் போதலே உண்மையாம்!

தக்க தோழமை இல்லையே என்று தவிப்பவர் விரிய எண்ணிப் பார்க்கும் திறனற்றவர். உற்ற இடத்து ஓடிவந்து உதவும் ஓர் உண்மைத் தோழன்; நம்பியிருப்பவரை நட்டாற்றில் கைவிட்டுக் கைதட்டி நகையாத் தோழன்; எந்நிலையிலும் பிரிவறியாத் தோழன் என எண்ணினால் அத் தோழன் இறைவனாகவே இருப்பான்!

தொண்டனுக்கு எதிர்பார்ப்பு ஒன்றே ஒன்று; அது தொண்டே! அத்தத் தொண்டனை எங்கே காண்பது? தொண்டன் எனத் தன்னைக் காட்டித் தொல்லைக்கே ஆளாக்கி வைத்து விட்டுத் தலைமறை வாகின்றவன் தொண்டனா?

இதனைச் செய்தால் இது கிடைக்கும் என எதிர்பார்த்துக் காலைக் கையை அசைப்பவன் தொண்டனா?

'தொண்டுக்குத் தொண்டே பேறு' என்பவன் அல்லனோ இறைவன்?

அவனை எவர் புகழ்ந்தால் என்ன? எப்படிப் புகழ்ந்தால் என்ன? அதனை நோக்கி நிற்பவனா அவன்?

"கட்டற்ற அப்பரம் பொருளுக்குக் கட்டற்ற மனத்தொடு
கட்டுற்று நிற்கும் கட்டமை ஒழுக்கமே காதற் பொருளாய்
அமையுமாம்! அதுவும் அவ்வாதன்(உயிர்) நலத்துக்கேயாம்"

என்பது இதன் உள்ளுறையாம்.

11.மொயியார் தடம்பொயிகை

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழியடியோம், வாழ்ந்தோம்காண்; ஆரழல்போல்,
செய்யா! வெண் ணீறாடீ! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா!நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்!
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்!

முழுமுதல் இறையின் பழுதிலாப் புகழ்பாடிக் குறைவின்றிக் காத்தருளுமாறு வேண்டுதல் பாடல் இது.

ஐயா, இறைவா, மலர்கள் மொய்த்துக் கிடக்க, அவற்றில் ஈக்களும் வண்டுகளும் மொய்த்துக் கிடக்க, நாங்களும் ஒருங்கு கூடி மொத்துப் பூம்புனலுள் புகுந்து முகத்தேயும் புறத்தேயும் கையால் நீரை அள்ளி வீசிக்கொண்டும் வளைந்து வளைந்து நீருள் உலாவிக் கொண்டும் உன் திருவடியை இறைஞ்சுகிறோம்.

எங்கள் பேரன்பின் மூலவர் எம்முன்னவர்; முன்னவர்க்கு முன்னவர்; இன்று புகுந்த புத்தடியேம் அல்லேம்; வழிவழி

வந்த பழவடியேம் யாங்கள்; அப்பேற்றால் நின் திருவருள் பேற்றை இடையறாது பெற்று என்றும் இன்பப் பேற்றில் வாழ்கின்றோம்; நீயறியாச் செய்தியன்றே ஈது!

இறைவா, பற்றிப் பரவி எரியும் எரியின் நிறத்தையும் வெல்லும் சிவந்த நிறத்தை உடையவனே, எம் செம்பொருள் சிவமே, வெண்ணிலவே கீற்றுக் கோலம் கொண்டுள்ளதோ என்று யாம் வியந்து நோக்குமாறு வெண்ணீறு அணிந்த தீராச் செல்வத் திருப் பொருளே, சின்னஞ் சிற்றிடையும் மையுண்ட பெருங்கண்ணும் கொண்ட எம்மை ஆளுடைய அம்மையை ஒருபாகமாகக் கொண்ட பெருவாழ்வுப் பெம்மானே, நீ ஆட்கொண்டருளும் வகையில் ஆட்கொண்டு உயிர்களுக்கு உய்திகாட்டிச் செய்யும் திருவிளையாடல்கள் உயிர்த்திரளை உய்விக்குமாறு சொல்லும் தரத்ததோ? அவ்வுயிர்த் தொகையுள் அடங்கிய யாம் எய்திய பேறுகள் தாம் எத்தனை எத்தனை? எய்திய நற்பேறுகள் போலவே நாங்கள் துயருக்கு ஆளாகாமல் தொலைத் தொழிந்த குறைகள் தாம் எத்தனை எத்தனை?

இப்பேறுகள் எவர் வேண்டியும் மன்றாடியும் நீ செய்வதா? இயற்கைத் திருவருளால் தொடர்ந்து செய்து வருதல் அறிவேம்; அறியேம் அல்லேம்; ஆயினும் யாம் எம் தம்மார்வ வேட்கையால் இறைஞ்சுகின்றோம். எக்குறையும் இல்லாமல் இன்றே போல் என்றும் எங்களைக் காத்தருள்வாயாக என்று வேண்டு கின்றனர்.

> "வேண்டத் தக்கது அறிவோய் நீ!
> வேண்டாதனவும் வேண்டிற்று அருள்வோய் நீ!
> எனினும், வேண்டுமாற்றால் வேண்டிக் கிடந்தோம்"

என்று வழிபாடு செய்க என்பது இதன் உள்ளுறையாம்.

இறைவன் திருப்புகழ்பாடல் ஈடிலா இன்பம்
வழிவழி அடியார் வாழ்வு அவ்வாறே இருக்கும்
என்பதைப் புதுவர் புரிந்து கொள்ள வைத்ததிறம்
எண்ணி மகிழத்தக்கதாம்.

12.ஆர்த்த பிறவித் துயர்கெட

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற்றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்!

பிறவித் துயர் நீங்கப் பெருமான் அருள் வேண்டிப் பாடியது இது. ஆழமானதும் அகன்றதுமாம் தண்ணிய சுனை நீரில் சுழன்று சுழன்று ஆடித்திளைக்கும் பாவைச் செல்வியர்களே. நாம் பல்வேறு பிறப்புகளை உற்றுப் பல்ல பல்ல துயர்ச் சுழிகளில் ஆட்பட்டு வந்த கொடுமை முற்றாகத் தீர்ந் தொழிய வேண்டும். ஆடி நிற்கும் ஆடவல்லான் நம் பிறவித்துயரைத் தீர்க்கும் நல்லான், தில்லைச் சிற்றம்பலத்தில் கனலும் மழுவும் மானும் பிறவும் ஏந்தி நின்று ஆடும் கூத்தப் பெருமான். அவன் தன் ஆடல் திறத்தால், மண்ணையும் விண்ணையும் மற்ற வற்றையும் படைத்தலும் படைத்தவற்றைப் பரிவோடு காத்தலும், செய்பவன். அவன் உலகாகியும் உயிராகியும்

ஒன்றாகியும் பலவாகியும் வெளிப்பட்டும் மறைந்தும் திருவிளையாடல் புரியும் திருவாளன்! அவன் புகழ்கள் புரிவுகள் ஆடல்கள் திருப்பெயர்கள் என்பவற்றைப் பேசிப் பேசி வளையல்கள் ஒலிசெய்ய, இடையில் பூட்டிய மேகலை ஆரவாரம் செய்ய, பூவணிந்த கூந்தலின் மேல் வண்டுகள் புகுந்து இசைமீட்ட, கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணப் பூக்கள் மல்கிக் கிடக்கும் பொய்கையில் வளைய வளைய வந்து, அவ் ஆளுடைய பெருமான் பொன்னான திருவடியை ஏத்தி வழிப்படுவோமாக, பிறவித் துயர் தொடராமல் காப்போமாக. இறையருளை வேண்டுவார் பல்லபல வேண்டுதல் வேண்டா; வேண்டுவது ஒன்றே ஒன்று. அவ்வொன்று பிறவிப்பிணி அற்றுப்போக வேண்டுதல் என்பது இப்பாடல் உள்ளுறை. சார்ந்ததன் வண்ணமாதல் உயிரியற்கை ஆதலால் தக்கோரைச் சார்தல், தக்கோர் கூட்டம் சார்தல் தக்க செயல்களில் ஈடுபட்டுத் தகுவகையால் தொண்டாற்றல் தக்கார்க்குத் தக்கானாக இருக்கும் இறையை ஒன்றல், அதன் விளைவால் பிறப்பு இறப்பிலாப் பெருமையன் பெற்றியைத் தாமும் அடைதல் என்பதே வீடுபேற்றின் இயல்பாம்.

தன் நிலையை மாற்றி அல்லது மாறி இறைநிலை எய்தாமல் வீடு பேற்றளவில் நின்றால் மீட்டும் பிறப்புண்டாம் என்பதால் வீடு பேறு விரும்பாமல் விழுமிய தொண்டும் தொண்டின் நினைவில் இறைநிழல் எய்தலும் கூறல் சிவனெறிக் கோட்பாடாம். மாணிக்க வாசகர் இறையடியையே அவாவி நின்று அடைந்தவர் ஆதலால் தாம் பாவையர் வழியாக உலகவர்க்கு அப்பேற்றையே பெறும் வகையைக் காட்டி 'யாம்பெற்ற பேறு இவ்வையகம் பெறுக' எனப் பாடினாராம்.

13. பைங்குவளைக் கார்மலரால்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்குஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்!

காண்பவை கருதுபவை முதலாம் எல்லாம் கடவுள் தோற்றம் காட்டுதல் பற்றிய பாட்டு இஃது, முழுதடியார் விழுமிய பார்வை விளக்கச் சீர்மையும் இஃது.

பாவை நோன்புச் செல்வங்களே பாருங்கள்

கொழுமையான குவளைக் கொடி: அதன் மலரோ அழகிய கருமை; அடுத்தே வளமான செந்தாமரைக் கொடி; அதன் மலரோ சீரிய செவ்வண்ணம்!

என்ன அழகு! என்ன வனப்பு!

இரண்டும் பின்னிப் பிணைந்து நிற்கும் காட்சி,
நம்மையாளுடைய அம்மையும் அப்பனும்
கூடி நிற்கும் காட்சி அல்லவா!

அங்கே பாருங்கள்! இங்கே பாருங்கள்! குருகு என்னும் பறவைகள்! குருகு என்னும் பறவைப் பெயர் நமக்கு என்ன நினைவை வூட்டுகிறது! அம்மையின் அணிமிக்க வளையல் களை அல்லவா!

அங்கே பாருங்கள்! இங்கே பாருங்கள்! அரவுகள்! அப்பனின் கழுத்தணியை மட்டுமா, அவன் சடைக்கட்டிலும் அம்மையின் இடைக்கட்டிலும் இலங்குகின்றவை அல்லவோ! புறந்தூய்மை நீரான் அமையும் ஆகலின், எத்தனை எத்தனை போர்கள் வந்து நீராடித் தங்கள் அழுக்கைப் போக்கித் தூய்மை பெறுகிறார்கள்! இக்காட்சி நமக்கு என்ன சொல்கிறது! அடியார், இறையடி தோய்ந்து தங்கள் மலங்களை அகன்ற பெற்றியைக் கண்ணாரக் காணச் செய்கின்றது அல்லவோ!

இவற்றை எண்ண எண்ண எம் அம்மையும் எம்பெரு மானும் எங்கும் எங்கும் தோற்றந் தந்தருளும் பேறே அல்லவோ! அம்மையப்பன் அருள்வண்ணம் காட்டும் அருமைப் பொய்கையில் உள்ளுள் பாய்ந்து பாய்ந்து நம்மகிழ்ச்சி ஒலியும், வளை ஒலியும், சிலம்பின் ஒலியும் சலசலக்கும் நீரின் ஒலியும் எங்கெங்கும் ஒன்றாகிப் பேரொலி செய்ய விம்மி யெழுந்த மார்பகங்கள் பூரிப்பால் பொங்கி எழக் குடைந்து குடைந்து ஆடலால் நீரும் பொங்கி எழத் தாமரைத் தண்ணம் புனலில் பாய்ந்து பாய்ந்து ஆடித் திளைப்போம் என்கின்றனர்.

நோக்குவன எல்லாம் அவையே போலாகத் தோன்றும் தோற்றம் விழுமிய முழுமைக் காதல் வண்ணமாம்! இறைமைப்

பற்றும் விழுமிய காதலின் மேலாம் காதல் ஆதலாலேயே முந்தைத் தமிழ்ச் சான்றோர் கடவுளிடத்து மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என ஓர் அகத்துறை வகுந்தனர்.

அம்மரபு தழுவியே அடியார் பலர் இறைவனைத் தலைவனாகக் கொண்டு தம்மைத் தலைவியாக அமைத்து அகப்பாடல் பாடினர். அப்பாடலுள் தலைப்பட்டு, இக்கோவை போன்றது எக்கோவை என்னும் திருக் கோவையார் மணிவாசகப் பெருமானால் யாக்கப்பட்டதாம்! மற்றை மற்றை அடியார்கள் பதிகத் தளவில் நிற்க வரையிறந்த இறைமைக் காதலால் "யாவையும் பாடிக் கோவைபாடு" என்று பலர் புகழ் நூலே யாத்தவர் மணிவாசகர் ஆதலின் அதன் மின்னற் கீற்றென இப்பாடல் பாவையுள் பளிச்சிடு கின்றதாம்!

"எல்லாம் இறை; எங்கும் இறை" என்பதே மெய்யடியார் வாக்கும் நோக்குமாம். என்பது இப்பாடல் உள்ளுறையாம்.

14.காதார்குழையாட

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆ மாபாடிச்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஆடல் பெருமான் அருளில் தோய்ந்து ஆடிப் பாடி நீராடும் மகளிர் அப் பெருமானும் பெருமாட்டியும் ஆடற் கோலத் தராய் அருளும் அருமையை 'ஆடலால்' அழகொழுகப் பாடியது இப்பாட்டு.

பாவை நோன்புப் பாவையீர்,

உங்கள் காதணிகள் கட்டியும் ஒட்டியும் கிடவாமல் ஓடவிட்டது என்ன ஆடவும், சீரிய பலப்பல அணிகலங் களும் நின்ற நிலை இருந்த நிலை இல்லாமல் ஆடவும், அசையும் வளியாலும் அசையும் உடலாலும் அசையும் கூந்தலில் சூடிய மாலை ஆடவும் அம்மாலையின் மலரிலுள்ள

தேனை எடுக்கச் செல்லும் வண்டுகள் மலரும் மாலையும் ஆடலால் தாமும் ஆடவும், இனிய தண்ணிய நீரில் புகுந்து ஆடலால் அப்புனலாம் நீர் ஆடவும், இவ்வாடல்களுக் கெல்லாம் ஒப்பத்திருச்சிற்றம்பலப் பெருமை பாடியும், அச்சிற்றம்பலத்து மெய்ப்பொருளாம் இறையைப் பாடியும், அம்மெய்ப் பொருளாய் அவன் இருக்கும் இயல் பாடியும், பேரொளி வடிவாய் இலங்கும் சிவம் பாடியும் அச்சிவம் தலையில் வேய்ந்த கொன்றை பாடியும் முதலுக்கு முதலாம் அம்முதலின் திறங்களைப்பாடியும் முடிவுக்கு முடிவாய் முடியாநிலையில் நிற்கும் திறங்களைப் பாடியும், பலப்பல வகையாலும் அறியாமைகளை யெல்லாம் படிப்படியே அகற்றி ஊட்ட வேண்டிய அறிவுத் திறங்களை யெல்லாம் ஊட்டி நம்மை ஆளாக்கி விட்டிருக்கும் அருள் வடிவாம் அம்மையின் திருவடிப் புகழ் பாடித் திளைப்போமாக!

ஆடலும் அசைதலும் பாடலும் பயிலலும் பற்றலும் உற்றலும் எல்லாம் இறையருளே என்ன எண்ணித் திளைத்து ஆடியும் பாடியும் இன்புறலே இறையடியார் இயலென எடுத்துக் காட்டியது இப்பாடல் உள்ளுறையாம்.

இப்பாட்டின் 'ஆட' 'ஆட' என்னும் அடுக்கு, இந்நாள் வரை எத்தனை ஆடல் பாடல்களாக விளங்குகின்றன என்பதை எண்ணுக! திரைப் படப் பாடல் ஆடவிட வில்லையா, ஆயிரம் ஆயிரம் பேரை!

'ஆடல்' என்பது வெற்றி! ஆடல் பெருமான் வெற்றிப் பெருமான் ஆதலால் அவர் தம் ஆடலும் வெற்றிப் பொருள் பெற்ற தாயிற்று.

ஆடல் என்பது ஆளலுமாம்! ஆளல் என்பது என்ன? 'கையாளல்' 'அரசாளல்' 'நட்பாளல்' என்பன வெல்லாம் ஆளலும் ஆடலும் ஒன்றே எனக் காட்டுமே! எதுவாக ஆக வேண்டுமோ, எதனை அடையவேண்டுமோ அதுவாக ஆகுங்கள்; அதனை அடையுங்கள்! என்பது 'ஆடல்' சொல், சொல்லும் பொருளாம்.

15. ஓரொருகால் எம் பெருமான்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
நீரொருகால் வாயோவாள்; சித்தம் களிகூர,
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்,
பாரொருகால் வந்தனையாள்; விண்ணோரைத் தான்பணியாள்;
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்,
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்!
வாருருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி

ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

இறைவன் ஈடிலா வகையில் ஆட்கொள்ளும் திறம் வியந்தது இப்பாட்டு.

கட்டமைந்த கச்சும் ஒளிமிக்க அணிகளும் அணிந்த பாவையீர், எப்பொழுதுக்கு எப்பொழுதோ ஒருமுறையே எம்பெருமான் என்று என்று நம்பெருமானைத் கூறபவள் இவள் இயல்பைப் பாரீர்! இவள் இதுகால் நம் பெருமான் திருப்பெயரையும் சீர்த்திகளையும் ஒரு பொழுதும் ஓயாமல் கூறிக் கொண்டே உள்ளாள். உள்ளம் ஊற்றெடுக்கும் உவகைப் பெருக்கில் திகழ்கிறாள்; கண்களிலிருந்து இடையீடு இல்லாமல் இறையருள் எய்திய இன்பத் திளைப்பில் வழிய வழியக்

கண்ணீர் பொழிகின்றாள்! இறைவற்கு இறைவனாம் பேரிறைவனை வீழ்ந்து வணங்கிய பின்னர் விண்ணவர் தம்மையும் பணிதலைக் கொள்ளாள். இறைவன் மேல் பித்தேறி நிற்கின்றாள். இவ்வாறு இறையன்பே வடிவாகச் செய்து விடவல்ல பெருந் சீர்மை நம்பெருமானை அல்லாமல் வேறு எவர்க்கே உண்டு? கல்லைக் கனியாக்கவும் வல்ல கண்ணுதற் பெருமான் திருவருள்தான் என்னே என்னே! காந்தமெனக் கவரும் கண்ணோட்டப் பெருவள்ளல் திருவடித் தாளின் சிறப்புத்தான் என்னே! நாம் அப்பெருமானை வாய்ததும்பப்பாடி அலை பொங்கிப் பொங்கி எழும்பூம் புனலில் பெருமான் புகழைப் பாடியும் ஆடியும் பெறலரும் பேறுகள் யாவும் வாய்ப்போமாக.

ஒரொரு முறை பெருமான் பெயர் சொல்வாரே இத்தகு பித்தேறி நிற்பர் எனின் நம் வழிவழி அடிமைப் பேறும் வாய்த்த தொண்டும் எவ்வெப் பேறுகளை எல்லாம் அருளும்! அவன் புகழேபாடி அவன் திருத் தொண்டே பூண்டு வாழ்வோமாக என்கின்றனர் முழுதுற ஒப்படைத்து முக்கணானைச் சிந்திக்க வல்லார் ஒருமுறையே கூறினும் அவன்திருவடிப் பேறு எய்துவர் என்பது இப்பாடல் உள்ளுறையாம். இறைவன் திருப்பெயரை ஒருமுறை கேட்ட அளவிலேயே, அவனை மறவா மன உறுதி பெற்றாள்! ஒழியாக் கண்ணீரள் ஆனாள்! அப்பெருமானை அன்றி அயலை வரையும் வணங்காத் திண்மை பெற்றாள்! இறைவனை நினைந்தும் வணங்கியும் வாழ்த்தியும் திருத்தொண்டு புரிந்தும் வாழ்வதே வாழ்வுப் பேறு எனக் கொண்டாள்! இவ்வெளிய வளுக்கு இப்பேறு எப்படி வாய்த்தது? ஆட்கொள்ளலில் ஆரொருவரும் ஒப்பில்லாப் பெருமானின் பெருங்கருணைத்

திறத்தால் வாய்த்த பேறே இஃதாம்! ஆதலால் நாமும் அப்பேற்றை அடைய அப்பிரானே தஞ்சமாய் ஆடியும் பாடியும் ஆளாவோம் என்கின்றனர்.

பெற்றார் பெருவளம் கூறிப் பெருமான் தொண்டில்
ஆற்றுப் படுத்தும் அருமையில் அமைந்துளது இப்பாட்டு!
மணிவாசகர் பாவைக் கன்னியர் வழியாகப் பாருக்கு
விடுக்கும் **ஆற்றுப் படை** ஈதென்க.

16.முன்னிக் கடலைச் சுருக்கி

பாவை பாடும் பாவையர் உள்ளம் எவ்வளவு விரிந்து பரந்தது என்பதைப் படம் பிடித்துக் காட்டுவது இப்பாட்டு

அவர்கள், உலகம் செழிக்க வேண்டும்; உயிர்கள் எல்லாம் தளிர்க்க வேண்டும் என்று எண்ணுவதை விளக்கு கின்றது இப்பாட்டு. உலகம் வெம்பி வெதும்பாமல் இருந்தால் தானே, பயிர்கள் முதலாம் உயிர்கள் எல்லாம, வெம்பி வெதும்பாமல் இருக்கும் அதற்கு மூலமானது மழைதானே! அதனால் பொழிவாய் மழையே என வேண்டுகின்றனர்.

அவர்களின் அருட்பேருள்ளம், 'மழையே பொழிவாய்' என்று சொல்லிப் பொழிதலைப் பின்னுக்குத் தள்ளாமல், முன்னுக்குத் தள்ளி விரைவு படுத்துகின்றது "பொழிவாய் மழையே" என ஆற்றலால் மாற்றி அமைக்கின்றது.

பெய்யும் மழையை நினைத்த அளவில், பிறந்து மொழி பயின்ற காலையே, பேசிப் பேசிப் பூரித்த ஆளுடைய அம்மையின் திருவுருவக் கோலங்களே, பெய்யும் மழைமுகிலாகத் தோற்றம் தருகின்றன.

உமையம்மையின் நீல மேனியும், நெளியும் இடையும், பொன்னஞ்சிலம்பும், புருவ வளைவும், புகழும் கொடையும்

ஆகிய எல்லாம் ஒன்றை ஒன்று முந்தி நின்று காட்சியளிக் கின்றன.

பூமாலை தொடுத்துப் பழகிய அவர்கள், பாமாலை தொடுக்க வல்லவர்கள் மட்டும் அல்லர். உவமை மாலை தொடுத்து, உமையம்மைக்குச் சூட்டும் திறமும் வாய்த்தவர்கள்.

"மழைமுகிலே நீ நில்லாதே; மெல்லவும் செல்லாதே; சுருங்கியும் போகாதே! விரிந்து படர்ந்து விரைந்து செல்க! சென்று கடற்பரப்புச் சுருங்கச் செய்! கடல் நீரையும் சுருங்கச் செய். எம்மை உடையவள் ஆகிய உமையம்மையைப் போல் நீலநிறம் கொண்டு நீ விளங்குக. எம்மை உடைய அவ்வம்மையின் அழகிய சிற்றிடை இருக்கிறதே! அதனைப் போல நீயும் மின்னி ஒளி செய்க. ஆம்!" முன்னிக் கடலைச் சுருக்கி, எழுந்து உடையாள் என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின் மின்னிப் பொலிந்து" என்கின்றனர். மழை முகிலே, எங்கள் பெருமாட்டியின் திருவடிகளில் திகழும் பொன்னஞ் சிலம்பின் ஒலிபோலக் குமுறி இடித்து ஒலி செய்வாயாக! அம்மட்டோ? எங்கள் அம்மையின் மூரி வளைந்து நிமிரும் புருவம்போல வில்லிட்டு அழகு செய்வாயாக. ஆம்! "எம்பிராட்டி திருவடிமேல், பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித், திருப்புருவம் என்னச் சிலைகுலவி" என்கின்றனர்.

நம்மை ஆளுடைய அம்மையைப் பிரிந்தறியாப் பெருமானின் அடியார் தம்மை அடுத்து, அம்மை நமக்கு முந்தி முந்தி அருளும் இனிய அருளே போலப் பொழிவாயாக! ஆம்! "நந்தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு முன்னி, அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்னப் பொழிவாய்" என்கின்றனர்.

வான் சிறப்பைத் தேன் சிறப்பாகப் பாடியவர் திருவள்ளுவர் வானின்று உலகைக் காத்து வரும் மழையே உயிர் தளிர்க்கச் செய்யும் அமிழ்து என்றவரும் அவர். மணிவாசகப் பெருந் தகையோ வான் சிறப்பை அம்மையின் அருளுருவத் திருக்கோலமாகக் கண்டு காட்டி அகங்குளிரச் செய்கின்றார்.

"வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்"

என்னும் **பரிபாடல் விளக்கம்** இப்பாவைப்பாட்டு.

கருமுகிலைக் கண்டு, காடும் நாடும் உயிரும் உறவும் சிறக்க வழிவகுக்கும் **கார் வழிபாடே 'காளிவழிபாடு'** ஆயிற்று.

கருமுகில் பொய்யாமல் பெய்யும் பேற்றை அம்மையின் அருட்பொழிவெனக் கொண்ட ஆர்வப் பெருக்கே, **'மாரி வழிபாடு'** ஆயிற்று.

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"

என்று போற்றிப் பாடினார் இளங்கோவடிகளார். மழைப் பொழிவில் இறைமையருளைக் கண்டு காட்டி மகிழ்ந்தது இப் பாவைப்பாட்டு.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!

17. செங்க ணவன்பால்

உயிர்களின் நோக்கு, துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் என்று சொல்லப்படும் அதனால்,

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்

என்றார் ஆசிரியர் தொல்காப்பியர்

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

என்றார் தாயுமானார்.

இப் பாவைப் பெண்களோ, பிறரெல்லாம் பெறுதற்கு அரிய இன்பப் பேற்றை - இறையருட் பேற்றை - அரியார்க்கும் அரியனாம் அப்பெருமான் எளிவந்த கோலமாய் இல்லந்தோறும் எய்தி இணையில்லா இன்பம் சுரந்த சீர்மைப் பேற்றைப் பெருகிய பூரிப்பால் பேசுகின்றனர். ஒப்பிட்டு ஒப்பிட்டு உள்ளம் உவக்கின்றனர்.

பாவையே, நறுமணங் கமழ்கின்ற கரிய நெடிய கூந்தலை உடையவளே, சிவந்த கண்ணையுடைய திருமாலுக்கும் இன்பப் பேறு உண்டு; நாற்றிசையும் முகமாகக் கொண்ட

நான்முகனுக்கும் இன்பப் பேறு உண்டு; அவலமிலா அமர நிலை எய்திய அமரர் தமக்கும் இன்பப்பேறு உண்டு; ஆனால், நாம் பெற்ற இன்பப் பேறு இருக்கிறதே அதற்கு இணையாவனவா அவை?

"செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதா" என்கின்றனர்.

தாயிற் சிறந்த தகவாளனாகிய அப்பெருமான், தாய் தன் குழந்தைக்கு நீராட்டி முகம் துடைத்து மூக்கு வழித்து நாவழித்து உடல் துடைத்து நீராலும் நறுமணக் கலவையாலும் புறத்தே பொலிவூட்டி அகங்குழைய மகிழ்விப்பது போல, நம் அழுக்குகளை யெல்லாம் அகற்றித் தூயோமாக்கி நாம் உறையும் இல்லங்கள் தோறும் எளிவந்தருளித் தன் செந்தாமரை போலும் சிவந்த அழகிய திருவடிகளைத் தந்தருளும் பெரும் பேற்றை என் சொல்வோம்! என் சொல்வோம்!

"கோதாட்டி இங்கு இல்லங்கள் தோறும்
எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருளும்"

பேராத இன்பத்தை - பெரியதோர் இன்பத்தை - எவ்வெவர்க்கும் எட்டாத பேரின்பத்தைப் பேரருளாய் தானே வந்தருளிய பெருமானுக்கு எளியோம் என்ன செய்ய வல்லோம்! கண்ணாகக் காத்தருளும் காவற் பெருமானை, பாரிட மெல்லாம் பரிந்தளிக்கும் பேரரசை அடியோம் ஆகிய நமக்கு உயிர் தளிர்க்கச் செய்யும் அரிய அமுதம் அன்னானை, நம்முடைய பெரும் பேற்றால் பெற்ற பெருந்தக்க பெருமானை, அவன்தன் நலங்களெல்லாம் நாவாரப் பாடி நலமெல்லாம் விளங்கத் தாமரைப் பூம் பொய்கையில் தண்ணென் றொலிக்கப் பாய்ந்து வளைந்து வளைந்து குடைந்து குடைந்து ஆடிப் பாடி மகிழ்வோமாக!

"சேவகனை, அங்கண் அரசை அடியோங்கட்கு
ஆரமுதை, நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்"

என்கின்றனர்.

பெறுதற்கு அரிய பேறு பெற்றார் என்ன செய்வார்? அவர்கள் கொள்ளும் பெருமிதம் இருக்கிறதே அது, அதனைத் தந்தாரை அகமகிழ்ந்து பல்கால் வாழ்த்த வைக்கும் அல்லவோ! தாம் பெற்ற பேற்றை வியக்க வைக்கும் அல்லவோ! தாம் பெற்ற பேற்றைப் பெறாதாருடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் வைக்கும் அல்லவோ! அமைந்து கிடந்தாரையும், அடங்கிக் கிடந்தாரையும் ஆடவும் பாடவும் கூடவும் குழையவும் வைக்கும் அல்லவோ! அப் பெருமகிழ்விலே அரும்பிய அருமைத் திருப்பாடல் இஃதாம்!

செயற்கரிய செய்து காவல் புரியும் பெருமானைச் 'சேவகன்' என்றும், நினைப்பார் நினைப்பில் இன்பச் சுரப்பாய்த் திகழும் பெருமானை 'ஆரமுது' என்றும், உரிமைப் பேரன்பால் 'நங்கள் பெருமான்' என்றும் அடுக்கும் அடுக்கு அவர்கள் உற்ற ஆரா அன்பின் வெளிப்பாடாம்.

மாணிக்க வாசகரின் 'கோதாட்டி' என்னும் ஒப்பிலா ஒருசொல்

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்"

என்பதன் விளக்கமாம்! சொற்சுருக்கம் பொருட் பெருக்க மூலமாகத் திகழுகின்றதாம்.

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

18. அண்ணா மலையான்

தன் முன் நின்று நிமிர்ந்து பார்ப்பவரைத் தன் உயரத்தால் மலைக்க வைப்பது மலையாகும். "குன்றத்தின் முன்னர்க் குறுகிப் பிடர் கடுக்க நின்றக்கால் தத்தம் நிலையறிவார்." குன்றத்தின் நிலையே அது என்றால், மலையைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

மலையின் உயர்வும் வலியும் வளமும் கண்டவர்கள் ஆங்கு இறைவனைக் கண்டனர். அவனே மலையாய்க் கண்டனர். அண்ணுதல் நெருங்குதல், உயர்தல். அண்ணா என்பது நெருங்க முடியாத என்னும் பொருளது. ஒளிப் பிழம்பான - உயர்வான - மலை அண்ணாமலை ஆயிற்று. அம்மலையுடையான் அண்ணாமலையும் ஆனான்.

ஒளிவடிவாம் இறைவன் அடியும் ஒளி! முடியும் ஒளி! ஒளி வடிவானவன் என்றால் எவ்வுறுப்பும் ஒளிதானே! ஒளிமிக்க அவன் திருவடித் தாமரையை, விண்ணவர்கள் தம் மணி முடி சூடிய தலையால் தாழ்ந்து தாழ்ந்து வணங்கு கின்றனர்! அப்பொழுது அவர்கள் முடியில் உள்ள ஒளிமணிகள் எல்லாமும் ஒளிமழுங்கிப் போகின்றன. அது போல், இடமெல்லாம் பரவும் ஒளியுடைய கதிரோன் தோன்றி

எழுந்தான். இருட்படலம் அகன்றது. விண்மீன்கள் தங்கள் ஒளிமழுங்கி மறைந்தன. இன்னும் நீங்கள் விழித் தெழுவில்லையே!

"அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகல"

என்று பொழுது புலர்ந்ததைப் புகல்கின்றனர். உறங்குவாரை எழுப்புவாராய்ப் "பெண்ணே" என அழைக்கின்றனர். இறைவன் நின்றருளும் தன்மையைப் பெண்ணாகியும் ஆணாகியும் இரண்டன் கலப்பாகிய அலியாகியும் விளங்கிய ஒளியமைந்த விண்ணாகியும் மண்ணாகியும் ஒன்றாய்க் கலப்பதுடன், தன்மையால் வேறாகியும் கருத்தால் கருதுவார் கருத்தில் அமுதமாகியும் நிற்கும் பெருமானின் பெருந்தக்க திருவடியைப் பாடி அழகிய இப் பொய்கை நீருள் பாய்ந்து ஆடி மகிழ் வோமாக என்கின்றனர்.

அது,

"பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங் கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம் வாவாய்"

என்பது.

இறைமை இயல்பை ஒன்றாதல் வேறாதல் உடனாதல் என மூன்றாகக் கூறுவர். இப்பாவைப்பாட்டு பெண் ஆண் அலி விண் மண் ஆகி என்பதால் ஒன்றாதலையும், வேறாகி என்பதால் வேறாதலையும், அமுதமாய் என்பதனால்

உடனாகியும் விளங்கும் இயல்புகளை இனிதின் விளக்குகிறது. இதனை

"ஈறாய் முதல் ஒன்றாய் இரு பெண் ஆண் குண மூன்றாய்
மாறா மறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழ் ஓசையோடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடனானான் இடம் வீழிம் மிழலையே"

என்பார் ஞானசம்பந்தர். இறைஒளி எய்தப் பெற்றவர் மல இருள் நீங்கப் பெறுவர் என்பதை நாளும் நாளும் காணும் கதிரவன் காட்சியைக் காட்டி விளக்கினார். கதிரொளி வருமளவில் காரிருள் ஓடி மறைவது போல இறையருளால் இருண்மலம் அகலும் என்பதைத் தெளிவித்தார்.

"பாவியேனுடைய, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய தேனினைச் சொரிந்து நின்ற
செல்வமே சிவ பெருமானே யானுனைத் தொடர்ந்து
சிக்கெனப் பிடித்தேன்"

என்று தாம் பெற்ற இன்பத்தை உயிர்கள் எல்லாம் பெறுமாறு பேரருளால் பாடிய பாட்டு இது.

வாயார அமுத வகைகளை அருந்தியும் பருகியும் மகிழும் நாம், செவியார இசையமுதமும் இன்னுரையும் கேட்டு மகிழும் நாம், 'கண்ணார் அமுதாம்' இயற்கை இறைமை இன்பத்தில் தோய்ந்து தோய்ந்து திளைக்க வேண்டிய இன்றியமையாமையைக் கனிவுறக் கூறும் மணிவாசகர் 'கண்ணார் அமுதமாய் நின்றான்' என்பதை மாந்தர் போற்றினால், வான் உய்யும்; மண் உய்யும்; பயிர் வகையும் உயிர் வகையும் உய்யும்! கண்ணார் அமுதம் துய்ப் போமாக! கண்ணார் அமுதம் காப்போமாக!

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாய் ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்!

19.உங்கையிற் பிள்ளை

பழநாளில் திருமணத்தைக் 'கொடைவிழா' என வழங்கினர் மணமகள் கையை மணமகன் கையொடும் இணைத்து வாழ்த்தும் வழக்கம் பண்டே உண்டு. அதனை மணமக்களைப் பெற்றோரின் பெற்றோன் ஆகியவர் செய்தமையால் அவர் 'தாதா' எனப் பட்டார். தாதா எனின் கொடையாளன் என்னும் பொருளில் வழங்குவது, அதனாலேயே ஆகும்.

மணமகளைக் கணவனிடம் ஒப்படைப்பது 'கையடை' என்றும் அவர்களை இனிது வாழ வாழ்த்தும் உரை 'ஓம்படை' என்றும் வழங்கப் பட்ட பழவழக்கை இப்பாவைப் பாட்டு இனிதில் இசைக்கின்றது.

எங்கள் இனிய பெருமானே, எளியோம் உனக்கு ஒன்றை உரைக்கின்றோம் கேட்டருள்வாயாக!

மங்கல மணம்நிகழும் நாளில் கணவனிடம் உன்கையில் ஒப்படைக்கப்படும் இப் பெண்பிள்ளை உனக்கே அடைக்கலம் ஆவாள் என்று பழங்கால முதலே பலரும் சொல்லும் சொல்லை நாங்கள் புதுமையாக மாற்றிக் கூறுவதற்கு மெய்யாகவே அஞ்சுகிறோம்.

எங்கள் மணவாளராக இருப்பார் உன்னடியாராகவே இருத்தல் வேண்டும். அவ்வாறு உன் அடியாராக இல்லார் எம்மை மணப்பவராக அமைதல் கூடாது. அம்மட்டோ? எங்கள் கைகள் உன் திருவடித் தொண்டுக்கே ஆகிப் பிறபணிகள் எவையும் செய்யாது இருப்பனவாக! இரவே யாகட்டும் பகலே யாகட்டும் எங்கள் கண்கள் உன் திருவருட் காட்சிகளைக் காணற்கே பயன்படுவனவாக என வேண்டுகின்றனர்.

> “உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
> றங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
> எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்!
> எம் கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
> எம்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
> கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க”

எம்மை ஆளுடைய இறைவனே, எங்கள் விருப்பம் இவையெனயாம் உரைத்தோம். எம் வேண்டுதலைக் கேட்டு அவ்வாறே நீ அருளினால் எங்கள் மகிழ்ச்சிக்கு எல்லை உண்டா? கதிரோன் கிழக்கே தோன்றுதலை நீங்கித் தெற்கே, மேற்கே, வடக்கே, என எங்கே தோன்றினால் தான் எங்களுக் கென்ன? “இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல் எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்” என்கின்றனர். திருமணத்திற்கு எத்தனை எத்தனையோ பொருத்தங்களைப் பார்க்கின்றனர். அப்படிப் பொருத்தம் பார்த்துச் செய்யும் திருமணங்கள் எல்லாமும் வெற்றியுற்றனவா? வேண்டத் தக்க ஓர் இன்றியமையாப் பொருத்தம் கணவன் மனைவியர் உள்ளப் பொருத்தம் தானே! அதனாலேதான் உள்ளத்தால் ஒத்த, செயலால் ஒத்த, காட்சியாலும் கருத்தாலும் ஒத்த

துணையமையும் வாழ்வைப், பாவைப் பெண்கள் வாயிலாக மாணிக்கவாசகர் வெளியிடுகிறார். இறைவனிடம் வேண்டும் வேண்டுதல், அவன் அடியார் திருசெவிக்கும் ஏற்புடையவை அல்லவோ!

“ஒருமுன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா;
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாம மல்லது நவிலாது என் நா;
ஐவரை வென்றோன் அடியிணை அல்லது
கைவரைக் காணினும் காணா என்கண்;
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது;
அருகர் அறவன் அறிவோற் கல்லதென்
இருகையுங் கூடி ஒருவழிக் குவியா;
மலர்மிசை நடந்தோன் மலரடி அல்லதென்
தலைமிசை உச்சி தானணிப் பொறாஅது;
இறுதியில் இன்பத் திறைமொழிக் கல்லது
மறுதர ஓதியென் மனம்புடை பெயராது”

என்று கவுந்தியடிகள் வாக்காக வெளிப்படும் இளங்கோவடிகள் வாக்கு, இப்பாவைப் பாடல் வாக்கொடும் எண்ணத் தக்கதாம்.

இறைமையில் முழுதுறத் தோய்ந்தார்க்கு இயற்கை மாறுபாடும் இன்னல் உறுத்தா என்றும், இன்னல் உறுத்துவ ஆயினும், அவர் இன்னலாகக் கருதார் என்றும் விளக்குவது “எங்கெழிலென் ஞாயிறு எமக்கு” என்பதாம்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்;
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க;
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க;
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்!

20.போற்றி அருளுக

திருவெம்பாவைப் பாடலின் நிறைவாகிய இப்பாடலில் போற்றரிய பெருமானைப் போற்றியாகவே கண்டு களி கூரும் இயல்பு காட்டப்படுகின்றது. அடிதோறும் போற்றியே முதலாக நிற்கின்றது. அப்போற்றிகள் அடைவிடம் ஒன்றாகவே ஒருமையுற்று ஒன்றுகின்றன. அவை திருவடிகளே யாம். இறைவணக்கம் பாடிய திருவள்ளுவர் பத்துப் பாடல்களுள் ஏழு பாடல்களில் 'தாள்' என்றும் 'அடி'யென்றும் குறிப்பிட்ட பான்மை எண்ணத் தக்கதாம். திருவடிப் புகழ்ச்சி எல்லாம் திருவடிப் பேற்றை நாடிச் செய்வதே என்பது உலகளாவிய கொள்கையாக இருத்தலும் எண்ணத் தக்கதாம்.

எங்கள் பெருமானே, எங்களைப் பாதுகாத்து எல்லாப் பொருள்களுக்கும் முதலும் மூலமும் ஆகிய நின்திருவடி மலர்களை அருள்வாயாக. எங்களைக் காத்து எல்லாவற்றிற்கும் முடிவாகிய நின் செவ்விய திருவடிகளை அருள்வாயாக!

"போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்"

எங்கள் பெருமானே, எல்லா உயிர்களும் தோன்றுவதற்கு இடமான உன் திருவடிகள் எங்களைப் பாதுகாத்து அருள்வனவாக!

எல்லா உயிர்களுக்கும் ஒடுக்கம் அருளும் நின் திருவடிகள் எங்களைக் காப்பனவாக.

நாங்களெல்லாம் உய்யுமாறு அடிமை கொண்டு இன்பத்தை அருளும் உன் திருவடிகள் எங்களைக் காப்பனவாக!

நாங்கள் மகிழ்ந்து நின்னை ஆடிப்பாடி வழிபடுகின்ற இம் மார்கழி நீராடல் எங்களைக் காப்பன வாக!

போற்றிமால் நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்!

இறைவன் திருவடியைப் பலகால் மகிழ்ந்து கூறுவார் திருவடி என்று கூறியமையாமல் 'பாதமலர்' 'செந்தளிர்கள்' 'பொற்பாதம்' 'பூங்கழல்கள்' 'இணையடிகள்' 'புண்டரிகம்' பொன்மலர்கள் என்று வேறு வேறு சொன்மலரால் தொடுப்பது, பலவண்ண மலர் தூவி வழிபாடு செய்வது போன்றதாம்.

மணி மொழியார் தேனொழுகப் பாடித் தீந்தமிழால் வழிபடும் முறையை நிலைநாட்டுவாராய்ப் போற்றித் திருவகவல் பாடியவர். இப்பாவைப் பாடலில் போற்றிகள் எட்டு புகழ் கின்றார் என்றால் அங்கே போற்றிகள் 158-ஐ அடுக்கடுக்காக அடுக்குகிறார். போற்றுவார் மெய்ப்பாட்டு மேன்மையை

"என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்"

என்று உருக்கம் ஊற்றுக்கண் திறந்தோட உரைக்கின்றார்.

இம் மெய்ப்பாட்டு நிலையைத் தாமே யடைந்து நின்று பாடியவர் மாணிக்க வாசகர் ஆதலால் அவர்தம்,

"திருவ சகமிங் கொருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே"

எனச் செந்தமிழ்ச் சிவப்பிரகாச அடிகளார் உணர்ந்து ஊற்றுக் கண் ணெடுக்கப் போற்றியருளினார்!

திருவாசகத் தேனின் உருக்குதல் தானே உலவாத பேரன்பால், கிறித்து பெருமான் திருத் தொண்டுக் கெனத் தம்மை ஆட்படுத்திக் கொண்ட பெருந்தமிழ்ச் செம்மல் போப்பையரை ஆட்படுத்தி மொழிபெயர்த்துக் கழிபேருவகை கொள்ள ஏவியது! போற்றி போற்றி எனப் போற்றிய பாவையைப் போற்றிப் பண்ணிசைத்து மகிழ்வோமாக.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்!
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்!
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்!
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்!
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்!
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்!
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்!
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்!

திருப்பள்ளி எழுச்சி விளக்கம்

திருவாசகப் பதிகங்களுள் ஒன்று திருப்பள்ளி எழுச்சி. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியத்தால் அமைந்தது.

தொல்பழநாளில் **'துயிலெடை நிலை'** என ஒரு துறை உண்டு. அது புறப் பொருள் சார்ந்தது.

அரசர்கள் துயில் நீங்கி எழுவதற்காகச் சூதர் என்னும் இசைவல்லார் இசை எழுப்பிப் பாடுவது வழக்கமாக இருந்தது. ஆசிரியர் தொல்காப்பியர்,

> "தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
> சூதர் ஏந்திய துயிலெடை நிலை"

என்றார். குற்றமற்ற புகழ்ச் செயல் புரிதலையே எண்ணிப் படுத்த வேந்தர், அப்புகழ்ச் செயல் புரிய எழுப்பும் இனிய மங்கல இசையாக அமைந்தது அது.

அரசர்கள் வாழ்ந்த இடம் கோயில் எனப்பட்டது, இறையுறையுமிடம் கோயில் எனப்பட்டதும், ஆட்சி செய்த மன்னவன் ஆண்டவன் என்றும் இறை என்றும் வழங்கப் பட்டதும், கடவுளும் ஆண்டவன் என்றும் இறை என்றும் வழங்கப்பட்டதும் எண்ணுக.

மன்னர்கள் கொண்ட பெருமைக்குரிய செயல்களும் வழக்கங்களும் கடவுளுக்கும் ஆக்கப்பட்ட வகையால் வந்தவை பல. அவற்றுள் ஒன்று திருப்பள்ளி எழுச்சியாம்.

இயவுளாம் இயற்கை இயக்கங்களுள் ஒன்றாம் கதிரை நாம் எழுப்பி விட்டா, எழும்பவேண்டும்:

சேவல் கூவா விட்டால், வண்டுகள் இசையா விட்டால், காகம் கரையா விட்டால் கதிரோன் எழாது (இயங்காது) கிடக்குமா?

அதன் எழுச்சியால் உண்டாம் இயற்கை எழுச்சியின் எழுப்புதலால் தானே சேவல் முதலியன கிளர்ந்து எழுந்தன!

உலகியக்கியாம் இயவுளை எழுப்புதல் முறையோ எனின், பெரும்பேராசிரியர் சி. அருணை வடிவேலர் கூறும் விளக்கம் கண்டு தெளிக. அது

"உறக்கமும் விழிப்பும் இல்லாது எஞ்ஞான்றும் ஒரு நிலையே யுடைய இறைவனை இங்ஙனம் உறக்கத்தில் ஆழ்ந்து கண்விழியாதான் போல வைத்துப் பாடுதல் குற்ற மாகாதோ எனின், ஆகாது. என்னை எனின், உலகத்துத் தலைவராயினார்க்கு அவர் தம் தொண்டர் செய்யும் பணி விடைகளை யெல்லாம் இறைவற்குத் தொண்டராயினார் தாம் அவனிடத்துச் செய்து மகிழ விரும்பும் வேட்கை காரணமாகப் பாடுதலானும், அவர்தம் வேட்கையுணர்ந்து இறைவனும் அவர்தம் செய்கைக்கு உடம்பட்டு அருளுதலாலும்" என்க. இவ்வாறன்றி இதனைக் குற்றம் எனின், இறைவனைத் தூய்மை இல்லாதான் போல வைத்து ஆனைந்தும், நீரும், பிறவும் ஆட்டுவித்தலும், அழகில்லாதான் போல மாலை முதலியவற்றால் ஒப்பனை செய்வித்தலும், பசியுடையான்

போல உணவூட்டுதலும் பிறவும் எல்லாம் குற்றமாய் ஒழியும். அஃதின்மையால் இத்திருப்பள்ளி எழுச்சியும் அன்னதேயாம் என்க” என்பது

நம்மவர் வழிவழியாகக் கொண்ட வழிபாடு ஒன்று ‘இல்லுறை தெய்வ வழிபாடு’ என்பது

இல்லுறை தெய்வ வழிபாடு என்பது, மாலைப் பொழுதில் ஒளி விளக்கேற்றி வழிபடுவதாம்! தனி அறையோ, அறையின் ஒரு பகுதியோ, சுவரில் அமைத்த மாடக் குழியோ ஆகிய ஒன்றில் பெரிய குத்துவிளக்கு முதல் கிழியஞ் சட்டி விளக்குவரை ஏதாவது ஒன்றில் ஒளி யேற்றி மலர் தூவி வழிபடுதலே அதுவாம். நம் தாய் தந்தையர், அவர் தாய் தந்தையராம் முந்தையர் ஆயோரை நினைந்து வழிபடுவதாம்.

பொங்கலிட்டாலும், புத்துடை உடுத்தாலும், புத்தணி முதலிய பூண்டாலும் அவற்றை இல்லுறை தெய்வ வடிவாம் விளக்கினை ஏற்றி அதன் முன் படையலிட்டுப் பயன்படுத்தும் வழக்கம் அறிவோமானால், பள்ளி எழுச்சி பாடும் வழிபாட்டு நெறியும் புலப்படும்.

நம் முந்தையரே நமக்கு வாய்த்த முதன்மைக் கொடையாளர் என்பதால்,

“எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே - இதை

வந்தனை கூறி மனத்தி லிருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ - இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ”

என்று பாரதியார் பாடினார். வீட்டுப்பற்றே நாட்டுப் பற்றின் அடிப்படையும், வீட்டுக் கொடையே நாட்டுக் கொடையின் பங்களிப்புமாம் என்பதும் புலப்படும். தனித்த ஆளும், தனித்தனி வீடும் எழும்பிய எழுச்சியே இயற்றிய கடப்பாடுகளே, ஏந்திய பண்பாடுகளே, செய்து வரும் தொண்டுகளே நாடாய் உலகாய் விரிந்து பெருகும் என்பதை உணர்ந்து போற்றும் வகையே இதுவாம்.

வீடு நாடு உலகம் என்பவற்றுக்கு மூலம் எது? முதல் எது? அந்த வாழ்முதலை அழைத்து, அதன் பெருமைகளை உரைத்து அதன் அருள் வேண்டிப் பாடியது பள்ளி எழுச்சியாம்.

தனக்குப் பசியுண்டு; அயர்வு உண்டு; உறக்கம் உண்டு; படுக்கை உண்டு; இவ்வாறானால் இவற்றை நமக்கு அருட் கொடையாக வழங்கிய அந்த மூல முதலுக்கும் இவை உண்டு; வித்து எப்படி? விளைவு அப்படி! விளைவின் தோற்றத்தைக் கொண்டு வித்துக்குச் செய்த ஆய்வு போல அம் மூலத்திற்கும் இவையெல்லாம் உண்டென்ற உணர்வில்.

“எம் பெருமான் பள்ளி எழுந்தரு ளாயோ”

எனப் பள்ளி எழுச்சி பாடியது இது.

உறங்கிக் கிடந்த உணர்வை, மூடிக்கிடந்த ஒளியை, மறைந்து கிடந்த மணிகளைக் காட்டிக் காட்டித் தந்த அந்த முதலை நோக்கி அழைத்து எழுப்பிப் படையலாக்கியது இது!

எந்த மூலம் கனியை காயை பூவை புனலை நமக்கு வழங்கியதோ அம் மூலத்திற்கு அவற்றை நாம் நம் கொடைப் பொருள் போல வழங்குவது போல்வது!

அளவிலா அன்புப் பெருக்கு உண்டானால் ஆராய்ச்சி இருந்த இடம் தெரியாமல் அடங்கிப் போய்விடும் அல்லவோ!

"எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயோ"

என்று ஏழுமுறை ஆம்! எழுமுறை! எழுப்புகிறது! எழும்ப வேண்டுகிறது பள்ளி எழுச்சி. மேலும்,

"ஆனந்த மலையே அலைகடலே பள்ளி எழுந்தருளாயே"

என்றும

"ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே"

என்றும் (இரண்டு முறை) எழுப்புகின்றது.

இன்று இப்பள்ளி எழுச்சி இறையை நோக்கி முழங்கட்டும்! பயில்பவரை நோக்கி முழங்கட்டும்! உழைப்பவரை நோக்கி முழங்கட்டும்! தொண்டரை நோக்கி முழங்கட்டும்!

அயர்வு அணுகாமல் உயர்வு ஒன்றி நிற்க வேண்டி எவரெவரையும் நோக்கிப் பள்ளி எழுச்சி முழங்கட்டும்! பாருலகம் எழுச்சியுற்றுச் சிறக்கட்டும்!

திருப்பள்ளி எழுச்சி

மூலம் தெளிவுரையும்

1. போற்றி என் வாழ்முதல்

படுக்கையில் இருந்து எழுப்புவதற்குப் பாடும் பாட்டு, பள்ளி எழுச்சிப் பாட்டாகும். பண்டைக் கால வேந்தர்கள் அரண்மனையில் இசை வல்லார் பண்ணொடு பாடி விடி காலையில் எழுப்புவது 'துயிலெடை நிலை' என்று வழங்கப் பட்டது என்பது அறிந்தோம்.

கோழி கூவி எழுப்பாமல் வாழி இசைத்து எழுப்பும் பெருமையது எம்மதுரைப் பேரூர் என்பது பரிபாடல் பாட்டு. அதனை இறைவன் திருப்பள்ளி எழுச்சியாக்குவது இத் திருப்பள்ளி எழுச்சி. இதன் விரிநிலை பாரத அன்னை பள்ளி எழுச்சியாகவும், தமிழன்னை பள்ளி எழுச்சியாகவும் ஆயது.

விடியற்காட்சிகளையும் விடியல் எழுச்சிகளையும் விம்மிதமாக எடுத்துரைத்து "எம் பெருமான் பள்ளி எழுந் தருளாயோ" என அடியார் வேண்டுவதே இப்பள்ளி எழுச்சியாம்.

"மாந்தன் அன்பு அறிவு ஆற்றல்கள் தொழிற் பட, இறைவனின் அன்பு அறிவு ஆற்றல்களைத் துணை புரியுமாறு, இணையடி தொழுது வேண்டிக் கொள்வதே இத்திருப் பள்ளி எழுச்சி" என மெய்யுணர்வாளர் கூறுவர்.

"திருப்பெருந் துறையுறை சிவபெருமானே, சிவ பெருமானே என அள்ளூறி நின்று உள்ளார்ந்த வேட்கையால் பள்ளி எழுச்சி பாடுகின்றார் மாணிக்கவாசகர். தாமே நின்று பாடுகின்றார்? அடியார் கூட்டமெல்லாம் ஒருங்கு முழங்கு வதாகப் பாடுகின்றார்."

எம் வாழ்விற்கு முதலாகவும் மூலமாகவும் விளங்குகின்ற பெரும்பொருளே உன்னைப் போற்றி வழிபடு கின்றோம்.

பொழுது விடிந்து விட்டது. உன் மெல்லிய திருவடி மலர்களுக்குத் தக்கதான, நறுமண மலர்களைத் தூவி, நின் திருமுகத்திலே எமக்கு அருள் வழங்கும் அழகிய புன்முறுவல் பூப்பதை மனங்கொண்டு உன் திருவடிகளைத் தொழுகின்றோம்!

சேற்றிலே பிறந்தாலும், அச்சேற்றையும் வீறி எழுந்து, பிறந்த இடத்திற்குத் தனிப்பேரழகு பாலிக்கும் தாமரைகள் மலர்ந்துள்ள, குளிர்ந்த வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே, உயர்ந்தஇடபக் கொடியை உடையவனே, எம்மை அடிமையாக் கொண்ட உடையவேன, எம்பெருமானே திருப்பள்ளி எழுச்சி கொண்டருள் வாயாக!

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்!
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே

இத்திருப்பாடலில் இறைவனை "வாழ்முதலாகிய பொருள்" என்கிறார் மணிவாசகர். அப்பொருள் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பொருள் ஆதலால், வாழ்முதல் ஆயிற்று. அப்பொருளின் அருமை விரிக்க விரிவது.

முதல் என்பது அடிப்படைப் பொருள். அது மண் விண் தீ நீர் காற்று என்னும் மூலப் பொருள் ஐந்தாய், அம் மூலங் களை நுகரும் மெய் வாய்கண் மூக்கு செவி என்னும் பொறி ஐந்தாய், அப்பொறிகளின் அறிவாகிய கண்டு கேட்டு உண்டு உயிர்த்துஉற்றறியும் புலன் ஐந்தாய், ஆறாம் அறிவுக்கு இடமாம் மனமாய் உட்கருவிகளாய் அமைவது வாழ்முதல்.

முதல் என்பது அகரமுதல் போலும் ஆதிமுதல்; எண்ணின் முதலாகிய, முதல் எண்; பொருள் முதலாகிய, முதல்; பயிர் முதலாகிய, வித்து கிழங்கு வேர். இவ்வெல்லாம் ஆவது வாழ்முதல். அது என்றும் இருப்பது. ஆகலின் வாழ் முதல் ஆயிற்று. வாழ்வை ஆக்கும் முதல், வாழ்வுக்கு முதல், வாழ்வின் முதல், வாழ்வுடைய முதல் எனப் பல பொருளும் தரும் அருமை யுடையது இம்முதல்.

இம்முதல், ஏற்றுயர் கொடியுடையது. "ஊர்திவால் வெள்ளேறே சிறந்த சீர்கெழு கொடியும் அவ்வேறென்ப" என்பது பெருந் தேவனார் பாடல். வ்லிமைக்கும் வெற்றிக்கும் எடுத்துக் காட்டாக இருக்கும் ஏற்றுக் கொடியுடையாய், என்னை ஏற்றுக் கொண்டுமுள்ளாய் - "ஏற்றுயர் கொடி யுடையாய் எனை உடையாய்" என்பதால் எனக்கு அப் பேற்றை அருளினை என்று பூரிக்கிறார்.

போற்றி போற்றி என முடிந்த திருவெம்பாவையின் தொடர்ச்சிபோல், 'போற்றி' என இப்பள்ளி எழுச்சிப் பாட்டு தொடங்கும் அருமை 'நூல் அந்தாதியாய் நுண் சிறப்புச் செய்கின்றது.'

2. அருணன் இந்திரன் திசை

திருப்பெருந்துறையின் கண் உறையும் சிவ பெரு மானே, கதிரோன் கிழக்குத் திசையில் சிவந்த ஒளிபரப்பி எழுந்தான். கப்பிக் கிடந்த இருள், அக்கதிரோன் வருகையால் அப்பாலுக்கு அப்பாலாய் அகன்று போனது.

இக்கதிரோனின் தோற்றம் உன் தாமரை மலர் போன்ற திருமுகத்தில் விளங்கும் திருவருள் போன்றது.

கதிரோன் மேலே எழஎழக், கண் போன்ற நறுமண மலர்கள் மலர்கின்றன.

மேலும் நின் திருக்கண் போன்ற வண்டுகளின் கூட்டங்கள் இன்னிசை பாடுவன ஆயின; இவற்றை நீ கேட்பாயாக.

"அருணன் இந்திரன் திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது; உதயம் நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற்றண்ணலங் கண்ணாந்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவைஓர்"

பெருமானே, அருட்பெருஞ் செல்வத்தை அருள்வதற்கு வருகின்ற இன்ப மலையே, துன்பங்களையெல்லாம் துடைக்க வரும் கடலே, நீ திருப்பள்ளி எழுச்சி கொள் வாயாக!

திருப்பெருந் துறையுறை சிவ பெருமானே,
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே,
அலைகட்டலே, பள்ளி எழுந்தரு ளாயே

ஒளி எழுந்தவுடனே இருள் அகல்தல் கண்கூடு. அக் காட்சி நாள் தோறும் காண்பது தானே; அக்காட்சி, என்ன கருத்தை, உலகுக்கு உரையாமல் உரைக்கின்றது? என்றால், மெய்யொளி ஏற்பட மனமாசு தானே, எழுந்த தடமும் இருந்த இடமும் தெரியாமல், மறைந்து விடும் என்பதையே காட்டுகின்றது.

மேலும் என்ன காட்டுகின்றது; கதிர் ஒளி வந்த அளவில் கண்கள் மலர்வது போல், மலர்கள் மலர்கின்றன. அம் மட்டோ, அம்மலர்கள் மலர்வதை நோக்கிக் கிடந்த வண்டு களும், தும்பிகளும் ஈக்களும் இசையெழுப்பிக் கொண்டு, பறந்து சென்று, மலரில் படிந்து இன்பத்தேன் கொண்டு, மலர் மலர்ந்த பயன்பாட்டையும் செய்து முடிக்கின்றது. இவ்வினிய கதிரோன் தோற்றமும் உயிர்களின் தளிர்ப்பும் சிறத்தலை,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு"

என்பார் நக்கீரனார்.

கதிரவன் காட்சியிலே இறைமையைக் காணும் மாணிக்கவாசகர் அவ்விறைமையை ஆனந்த மலையாகவும், அலைகடலாகவும் சுட்டுகிறார்.

நடந்து வரும் மலையுண்டா? நயந்து வந்து நலஞ் செய்யும் மலை ஒன்று உண்டா? 'உண்டு' என்பது, மாணிக்க வாசகர்வாக்கு. அருட்செல்வத்தை வாரி வாரி வழங்கி, ஆரா இன்பத்தை உயிர்களுக்கு ஆக்க வேண்டும் என்றே, தேடித்

தேடி வரும் தெய்வமலை அது! இன்பமே வடிவாகிய இறைமை மலை அது என்கிறார்.

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றத்திற்கு உவமையாம் மலை, எழுந்து நடந்து வந்து இன்பவெள்ளம் பொழியும் மலை யாகத் திகழ்வது என, இல்பொருள் உவமை அணி நயம் பட மட்டும் வாராமல், இறைமைத் திறம் எழிலுற விளக்குவதாகவும் இஃது அமைந்து சிறக்கின்றது.

'அலைகடலே' என்பது அலையை உடைய கடல் என இறைமைக்குச் சுட்டுதல் இயல்பொடு கூடிய தில்லையாம். அலைவறியா அமைதிக் கடலை 'அலைகடல்' என்பரா? அடியார்க்கு வரும் அலைவாகிய துன்ப துயரத் துடிப்புகளை யெல்லாம், கருதிய அளவால் கடிதில் அகலச் செய்யும் கடலே அதுவாம். அலைத்தல் துன்பத்திற்குத் துன்பந்தந்து அகற்றுதல். அலையா மலையையும், கடலையும் ஒப்ப நோக்கி உரைக்கும் மெய்யொளி மாமணிப்பாட்டு இதுவாம்.

அறுபதம் என்பது ஆறுகால்களையுடைய வண்டைக் குறித்து. அவ்வறு பதத்திற்கு 'அண்ணல்' என்னும் பெருமைச் சொல் தந்தார்; அது 'கோத்தும்பி' என்று அவர் பாடும் வரிப்பாடலை நினைவூட்டுவதாம்.

3. கூவின பூங்குயில்

திருப்பெருந்துறையுறை சிவபெருமானே, யான் எனது என்னும் செருக்குடைய எவரும் அறிவதற்கு அரிய பரம் பொருளே, அடியேம் ஆகிய எமக்கு, எளிமையாய் எழுந்தருளி நலம் பாலிப்பவனே, எம்மை ஆட் கொண்டருளிய பெருமானே, இனிய குயில்கள் இசை எழுப்பின; சேவற் கோழிகள் குரலெழுப்பின; மற்றை மற்றைப் பறவைகள் பலபட இசைத்தன; வெண் சங்கங்கள் முழங்கின; விண் மீன்கள் ஒளி மழுங்கின; காலைக் கதிரொளி மண்ணகப் பரப் பெல்லாம் ஒளியுறச் செய்கின்றது. இறைவனே அடியேம் ஆகிய எங்களுக்கு, நன்கு செறிந்த கழல்களை அணிந்த நின் திருவடிகளைக் காட்டி யருள்வாயாக! அப்பேறு நல்கத் திருப்பள்ளி எழுச்சி கொள்வாயாக!

கூவின பூங்குயில்; கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்
தொருப்படு கின்றது; விருப்பொடு நமக்குத்
தேவ, நற் செறிகழல் தாளிணை காட்டாய்;
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே.

குயிலும் கோழியும் பறவைகளும் சங்குகளும் வைகறைப் பொழுது வர இருக்கின்றது என்பதை உலகுக்கு உரைக்கும் கட்டியங் கூறிகள். வெள்ளி ஒளி குறைதலும் கதிர் ஒளி விரிதலும் ஆகிய காட்சியால் விடியல் பொழுதை உலகுக்கு உணர்த்துவன அவை. அவையெல்லாம் ஒலிக்கவும், ஒளி செய்யவும் எம்பெருமானே நீ உறங்கலாமா? விழித் தெழுந்து எங்களுக்கு ஒளி முகம் காட்ட வேண்டாமா? செருக்குக்கு ஆட்படாமல் நின்னை அடைக்கலம் பூண்ட அடியார்க்கு எளிவந்த பிரானாம் நீ, இன்னும் விழியா திருக்கலாமா? எழுந்தருள் செய் என்கிறார். மாணிக்க வாசகர் பன்னிசைத்துப் பாடும் பழவடிமைக் குயில்! மாங்குயில்! தேங்குயில்! அக்குயிலுக்குப் பறவைக் குயில்மேல் பாசம் மிகுதி.

கீதம் இனிய குயிலே, நீல உருவிற் குயிலே. தேன் பழச் சோலை பயிலும் சிறுகுயிலே, சுந்தரத்தின்பக் குயிலே, காருடைப் பொன் திகழ் மேனிக் கடிபொழில் வாழுங்குயிலே, கொங்கணவும் பொழிற் சோலைக் கூங்குயிலே என்று கூவிக் கூவிக் கொஞ்சுவார் அவர். எல்லாம் வல்ல இறைவன் வந்தருளுமாறு கூவ, அக் குயிலையே தூதும் விடுவார். அக்காதலால் குயிலிசையே அவர் காதில் களிதுளும்பப் பட்டதால் கூவின பூங்குயில் என முற்பட வைத்தார்.

பெற வேண்டியபடி அறிவுத் திறங்களெல்லாம் பெற்று இறையருளைப் பெறுதற்கு வாய்ப்பதே எனினும், அவ்வாறு பெறுதல் எளிதன்று; மிக அருமையுடையதாம். ஆனால், இறைவனை அடைக்கலமாகப் பற்றிக் கொள்ளும் அமைதித் திறத்தைப் பற்றிக் கொண்ட அடியவர்க்கு, அவன் அருளை அடைதல் எளிது; மிக எளிது; அவர்களைத் தேடி வந்தே அருள் வழங்கும் வள்ளன்மையாளன் அவன் என்பதை,

"யாவரும் அறிவரியாய் எமக் கெளியாய்"

என்கிறார். இறைவன் எளிவந்து தமக்கு அருளிய பெருந் தகைமையை,

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ
பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து நின்ற செல்வமே சிவபெருமானே"

என்கிறார்.

இயற்கையில் எழும் எழுச்சி, உயிர்களின் எழுச்சியாய் உறக்கம் விழித்து உவகையால் கடனாற்ற வாய்க்கும் வைகல் எழுச்சியைக் காட்டி இறையை எழுப்புவதாம் இப்பள்ளி எழுச்சிப் பாட்டு, உயிர்ப் பறவைகள் உவகைப் பெருக்காகி உயரத்தில் உயரமாய்ப் பறக்க உந்தி எழுப்பும் உந்து கோல் ஆவதாம்.

4. இன்னிசை வீணையர்

இறைவனைத் திருப்பள்ளியில் இருந்து எழுப்ப வேண்டும் என்றும், அவன் திருமுகத்தாமரையைக் கண்டு, அவன் அருட்கண்ணொளியைப் பருக வேண்டும் என்றும், ஆர்வத்தால் எவர்க்கும் முன்னாகச் செல்ல வேண்டும் என்றும் கிளர்கிறார், ஆளுடைய அடிகளாம் மாணிக்க வாசகர். ஆனால், அவர்க்கும் முன்னே முன்னே முந்தி வந்து நிற்கும் ஆர்வ அடியார்களைக் கண்டு வியப்பும் விம்மிதமும் அடைகிறார். பெருமானே, யான் மட்டுமா நிற்கிறேன்? எவரெவர் எத்தகும் ஆர்வத்தராய் நிற்கிறார் என்று நீ பார்த் தருள வேண்டாமா? இன்னிசை வீணையை மீட்டுவார் ஒரு பக்கம் நிற்கின்றனர்; ஏழிசை யாழினை ஏந்தி அமுதம் சொரிவார் ஒருபக்கம் நிற்கின்றனர்.

மறை மொழிகளை மொழிந்து மகிழ்வார் ஒருபக்கம் நிற்கின்றனர்.

உள்ளார்ந்த உவகைப் பெருக்கால் வாழ்த்திசைப்பார் ஒரு பக்கம் நிற்கின்றனர்.

புள்ளும் எழும்பாப் பொழுதிலே எழும்பி, எச்சிலுறா மலர்களை எடுத்துவந்து, எழிலுற உனக்குச் சூட்டுவதற்காக,

இணை இணையாய்த் தொடுத்த மாலையை எடுத்த கையராய் நிற்பவர் ஒருபக்கம்!

இன்னது வேண்டும் என்று வேண்டாமல், தொழுவதே நோக்காக நிற்கும் பழவடியார் ஒருபக்கம்!

தொழுதும் வாழ்த்தியும் தொண்டு பல செய்தும் உன்னருள் பெற அறியாராய், அழுதே உன்னடியைப் பெறலாம் என்னும் துணிவால் நிற்பார் ஒருபக்கம்!

நிற்கவும் ஆற்றாராய் ஆர்வ ஊன்று கோலே கோலாய்த் தளர்ந்து நிற்பார் ஒருபக்கம்.

உச்சித் தலையின் மேல் உயர்த்திக் கூப்பிய கையினராய் நிற்பார் ஒருபக்கம்!

திருப் பெருந்துறையுறை பெருமானே, இவ்வாறெல் லாம் அடியார்கள் பக்கம் பக்கமாய் நிற்கின்றனர்.

அவர்களோடு எளியனாம் என்னையும் ஆட்கொண்டு அருளுமாறு நீதிருப்பள்ளி எழுச்சி கொள்வாயாக

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டின்னருள் புரியும்
எம்பெருமான்பள்ளி எழுந்தரு ளாயே!

-என்கிறார்.

வீணையும் யாழும் வேறு வேறு இசைக் கருவியாகக் குறிக்கும் இக்குறிப்பு, "பண்ணொடு யாழ் வீணை பயின் றாய் போற்றி" எனவரும் அப்பரடிகள் வாக்கொடு கருதத் தக்கதாம். ஏழிசை மீட்டும் கருவிகள் வீணையும் யாழும் எனினும், இயல்பான நரம்பும் கட்டும் அமைந்தது வீணை என்றும், எழில்நலம் துலங்க இயற்றப்பட்டது யாழ் என்றும் கருத வாய்க்கின்றது. புனையா ஓவியம் போன்றும், புனைவு ஓவியம் போன்றும் கொள்ளல் தகும். இருக்கு என்பது மறை மொழி என்னும் மந்திர மொழியதாகும். தோத்திரம் என்பது வாழ்த்திசைப் பாடலாகும்.

இணை இணையாக வைத்துத் தொடுக்கப்பட்டதும் செறிவு உடையதும் ஆகிய மாலை 'பிணையல்' எனப்படும். துவள்தல் நிற்றற்கும் ஆற்றா மெலிவும் முதுமையும் வாய்ந்த நோன்புடையார் இயல்பாகும்.

என்னையும் ஆண்டு கொண்டு இன்னருள் புரியும் எம்பெருமான் என்றது, ஒன்றற்கும் பற்றாத என்னையே ஆண்டு கொண்ட நீ, இத்திறவோர்களை ஆட்கொள்வது நின் அருளுக்கு இயற்கையானதேயாம். ஆதலால், யான் பெற்ற பேற்றை இவ்வடியார்கள் எல்லாரும் பெறும் வகையால் நின் திருவருள் பாலிக்குமாறு நீ திருப்பள்ளி எழுச்சி புரிவாயாக என்கிறார். அடியார்கள் அனைவரும் அவன் அருள் பெறு தலை அவாவி உரைத்தது இப்பாட்டு.

5. பூதங்கள் தோறும்

பெருமானே, உன்னை உன்னிப்பாக ஆராய்ந்து தெளிந்த அறிவாளர்கள் ஒன்றில் இருந்து ஒன்றாக விரிவாகிய வெளி, வளி, தீ, நீர், நிலம் என்னும் ஐம்பூதங்களோடும் கலந்து பிரிவிலா ஒன்றாய் நின்றாய் என்பர். அல்லாமலும் தோற்றமும் மறைவும் இல்லாதவன் என்றும் சொல்வர். இத் தன்மைகளை அமைத்து இசை பாடியும், கூத்து ஆடியும், காட்டுவர். இவற்றை அல்லாமல் உன்னைக் கண்ணாரக் கண்டறிவாரை இவரென நாங்கள் கேட்டும் அறிந்திலோம்.

"பூதங்கள் தோறும் நின் றாய்எனின் அல்லால்,
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்,
கேட்டறி யோம்,உனைக் கண்டறி வாரை"

நீர்வளத்தால் நிலவளம் பெற்றோங்கும் திருப்பெருந்துறையில் உறையும் மன்னவனே, நீ சிந்திப்பார் சிந்தனைக்கும் எட்டுதற்கு அரியாய், ஆயினும் உன் பேரருள் தன்மையால் எங்கள் முன்னே எளிமையாய் வந்து, எங்களுக்கு உண்டாகிய துயரங்களை யெல்லாம் அகற்றி எங்களை ஆட்கொண்டாய். எம்பெருமானே நீ திருப்பள்ளி யினின்றும் எழுந்தருள் வாயாக.

"சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே"

இறைவன் பூதங்களொடு கலந்து அவையாக நிற்பதை, மாணிக்கவாசகர்,

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

என்று போற்றித் திருவகவலில் பாடினார். இவை கீழிருந்து மேலேறு வரிசை. ஒன்றில் இருந்து இரண்டாய் மூன்றாய் நான்காய் ஐந்தாய் விரிநிலை, மேலிருந்து கீழிறங்கு முறையாகும். வெளியில் ஒலியும், வளியில் அதாவது காற்றில் ஒலியொடு தொடுதல் உணர்வாகிய ஊறும், தீயில் ஒலி, ஊறு ஆகியவற்றொடு ஒளியும், நீரில் ஒலி ஊறு ஒளி ஆகியவற்றொடு சுவையும், நிலத்தில் ஒலி ஊறு ஒளி சுவை ஆகியவற்றொடு மணமும் வளர்நிலையில் இருப்பதை அறியலாம். இந்த உண்மையை ஆசிரியர் தொல்காப்பியர்,

"நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என்றார். இவ்வைம் பூதங்களைக் கொண்டதே உடல் என்பதை,

"பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்"

என்றார் திருவள்ளுவர்.

இறைவன் போக்குவரவு இல்லான் என்பது தோற்றமும் ஒடுக்கமும் அல்லது பிறப்பும் இறப்பும் இல்லாதவன் என்பதாம்.

போக்கு வரவு புரிபவற்றைப் பிறந்த பிறப்பறுக்கும் பெருமான் அவன் ஆகலின் போக்கு வரவு இல்லான் என்றார்.

மாணிக்கவாசகரை இறைவன் ஆட்கொண்ட தன்மையை,

"உனக்குக், கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி"

என்றும்,

"கண்ணால் யானும் கண்டேன் காண்க"

"சிவனென யானும் தேறினேன் காண்க
அவனெனனை ஆட்கொண் டருளினன் காண்க"

"இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அறை கூவி ஆட்கொண் டருளி"

என்றும்

"காட்டாதன வெல்லாம் காட்டிப் பின்னும்
கேளாதன வெல்லாம் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான்"

என்றும் இன்னவாறாக வரும்அவர் வாக்குகளே விளக்கும்

தாம்பெற்ற பெரும் பேற்றைப் பிறரும் பெறவேண்டும் என்னும் பெரு நோக்காலேயே அடியார் திருக் கூட்டத்தை யெல்லாம் உள்ளடக்கி, "ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியம்" என்றார்.

மாணிக்கவாசகர்க்கு ஏதம் உண்டோ எனில், இல்லையாம். "அல்லல், அருளாள்வார்க்கில்லை" என்பது வள்ளுவர் வாய்மொழி மணிவாசகரோ

"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

என வேண்டுதல் வேண்டாமை இலாப் பெருநிலை உற்றவர் ஆகலின், பிறர்க்கென வேண்டிய பெருவேண்டல் ஈதாம்.

6.பப்பற வீட்டிருந்து

பெருமானே, செயற்பாட்டிலும் உணர்விலும் பரபரப்பு அற்றவராய் மெய்யுணர்வு தலைப்பட்டவராய் விளங்கும் உன்னடியார் பற்றுகளை எல்லாம் உன்னை யடைந்து அகற்றியவராய், உன்னையே பற்றியவராய் உள்ளனர். அவர்களுள் பலப்பலரும் நின் அருளைப் பெறாது அவலம் அடைகின்றார் போலவும், மானிடர் பொது இயல்பு போலவும், மைம்முகில் கொட்டும் மழைத்துளி போலக் கசிந்தழுது கண்ணீர் விட்டு வணங்கி நிற்கின்றனர்.

"பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின்றார்"

அருளே வடிவான அம்மையின் மணவாளனே, குவிந்த செப்புப் போலச் செந்தாமரை மலரும் குளிர்ந்த வயல்சூழ்ந்த திருப்பெருந் துறைக்கண் உறையும் பெருமானே, யாம் பெற்றுள்ள இப்பிறப்பினை வேரொடும் அறுத்து எங்களை யெல்லாம் ஆண்டருளும் எங்கள் பெருமானே நீ திருப்பள்ளியில் இருந்து எழுந்தருள்வாயர்க.

"அணங்கின் மணவாளா,
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே"

பப்பற என்பது பரபரப்பு நீங்க என்பது. பரபரப்பு என்பது பப்பு என-இடைக்குறைந்து நின்றது. பரபரப்பு மன ஒருமைப் பாடும் உறுதிப்பாடும் இல்லார்க்கு வரும் பொருந்தா உணர்வு. பதறாத செயல் சிதையாது என்னும் பழமொழி, பரபரப்பு உடையார் செயல் சிதையும் என்பதைத் தெளிவாக்கும்

"ஓடும் செம்பொனும் ஒப்பவே நோக்கும் நோக்கும்,
வீடும் வேண்டா விறலும்" உடைய அழுந்திய

அடியார்க்குப் பரபரப்பு உண்டோ? சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி உறுதிப்பாடு இல்லாதவரையே கூடிநிற்கும். பொறாமை ஆசை கொடுஞ்சொல் என்பவற்றைத் துறந்த துறவர் மெய்யடியார். பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் கண்ட சீர்த்தியர் அவர். தம் உடம்புமே அவர்க்கு மிகை என விளங்குபவர். ஆதலின் தெய்வம் உறையும் திருக்கோயிலாக விளங்கும் அவரும், மற்றை மாந்தரைப் போல அழுது வழியும் கண்ணீரராய் இறைவனை வணங்கி வழிபடுவர் என்பதை.

"மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின் வணங்குவர்"

என்றார்.

எடுத்த பிறப்பை அன்றி அடுத்த பிறப்பு வருதல் ஆகாது என்பாராய், "இப்பிறப் பறுத்து எமை ஆண்டருள் புரியும்"

என்று வேண்டினார். பிறப்பறுக்கும் பெருநிலையையும் தாமே அடைய வேண்டும் என்னும் தம்மார்வம் இல்லாராய்த் தம்மொடு நிற்பாரும் எங்கும் வாழ்வாரும் ஆகிய அடியார் அனைவரும் பிறப்பறுக்கும் பெருநிலை அடையவேண்டும் என்னும் ஆராப் பெரு வேட்கையராய், "இப்பிறப் பறுத்து எமை ஆண்டருள் புரியும்" என்று பன்மையால் வேண்டினார். இது தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் பெருந்தகைமை.

யாம் கற்றுத் துறைபோகிய முற்றிய அறிவினரும், தம் அன்புக்கும் அரவணைப்புக்கும் உரிய குழந்தையர்களிடத்தும், சிறுவர்களிடத்தும், அவரவர் இயல்புக்குத் தக ஆடியும் பாடியும் பேசியும் களித்தும், அவர்களை மகிழ்வித்தும், தாமும் மகிழ்ந்தும் விளங்கும் உலகியல் தேர்ச்சியொடு மணிவாசகப் பெருந்தகை, "மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின் வணங்குகின்றார்" என்பதன் மெய்ம்மையை உணர்ந்து போற்றுவர். இத்தன்மையைப் போற்றுவார் போலவே, எவ்வெச் சமய மேலோரும் எத்தகைய உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தார் எனினும் அடித் தொண்டர் செய்யும் வழிபாடு போலவே தாமும் வரிபாடு செய்வாராய்க் காட்சி வழங்குகின்றனர் என்க. தெய்வத் திருமடங்கள் தோறும் இக்காட்சி மெய்க்காட்சி யாகிவருதல் கண் கூடாம்.

7. அதுபழச் சுவையென

பெருமானே, நின் திருவடியியல்பு பழச்சுவை போன்றது என்பார் உளர். அது அமுதம் அன்னது என்பாரும் உளர். அதனை அடைவது அரிது என்பாரும் உளர். அன்றி எளிது என்பாரும் உளர். அவர்கள் இவ்வாறு பலபடக் கூறினும் அதன் தன்மையை உன் அருள்வாய்த்தால் அல்லாமல் அமர வாழ்வுடையாரும் அறிய மாட்டார். இவ்வுருவமே அவன் திருவுருவம் எனவும், இத்தன்மையனே அவன் எனவும், நாங்கள் கண்டுமகிழும் வகையால் எங்களை ஆண்டு கொண்டு இங்கே எழுந்தருள் வாயாக.

"அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்;
இது அவன் திருவுரு; இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்"

தேன் பெருகும் சோலைகள் மிக்க திருஉத்தர கோச மங்கைத் திருக்கோயில் கொண்டவனே, திருப்பெருந் துறையை ஆட்சி கொண்ட அண்ணலே, அடியார்களாகிய நாங்கள் செய்யக் கடவதாகிய திருப்பணி யாது என்றும், எங்களை அப்பணியில் ஆளாக்கிக் கொள்ளுமாறு யாது என்றும் கேட்டு நிற்கின்றோம். எங்கள் பெருமானே நீ திருப்பள்ளியினின்று எழுந்து அருள் புரிவாயாக.

மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எது வெமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே!

இறைவன் திருவடிசாரும் இன்பத்தை அறிந்தோர் அரியர் என்பதையும், அவ்வாறு அறிந்ததாகக் கூறிய வரும் ஒரு முறையாய்க் கூறினார் அல்லர் என்பதையும் சுட்டிக் காட்டி, அவன் அருளாலேதான் அவன் தாளை வணங்கும் பேறும், இன்புறும்பேறும் அடைவர்என்பதையும்வெளிப்படுத்தியுரைத்தார்.

அரியதில் அரியதாம் அடிப்பேற்றையும், அவன் திருவுருவப் பேற்றையும், முழுதுறும் அடிமை பூண்டு முற்றிய வேட்கையராய் நிற்கும் தாங்கள் அறிந்து கொள்ளுமாறு ஆட்கொண்டருள வேண்டும் என்றும் வேண்டுகின்றார். மாணிக்கவாசகர் முன்னரே காணாதன வெல்லாம் காணவும் கேளாதன வெல்லாம் கேட்கவும் பெற்ற பேறுடையவராக இருந்தும் வழிவழியடியார்களும் அப்பெரும் பேற்றைப் பெறுதல் வேண்டும் என்னும் வேட்கையால் இது அவன் திருவுரு; இவன் அவன் எனவே இங்கு எழுந்தருளும் என வேண்டுகிறார்.

'தம்முதல் குருவுமாய்' என்னும் மெய்கண்டார் உரைக்கு எடுத்துக் காட்டாக மெய்க்குருவரைத் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் அடிக்கண் அடியார் சூழக் கண்டவர் மாணிக்கவாசகர்.

வேந்தன் மகன் ஒருவன் வேட்டுவர் இடத்திலே தங்கி வளர்ந்தான். அவன், தான் வேந்தன் மகன், என்பதை அறியானாய் வேடர் குடியின் இயல் செயல்களில் தலைப்பட்டு நின்றான்.

ஒருநாள், மன்னன் அம்மகனைக் கண்டு நீ என் மகன் வேடன் மகன் அல்லை என்று தெளிவுபடுத்தத் தன் இயல்பை உணர்ந்துவேந்தன் இயலும் செயலும் பெற்றாற்போல், ஐம்புலன்களாகிய வேடர்களிடத்தே அகப்பட்டுத் தன்னியல் அறியாது துயருறும் உயிரை, இறைவனே குருவாய்த் தோன்றி அவன் மயக்கம் ஒழித்து உண்மை உணர்ச்சியால் தன்னை உணர்ந்து உய்யச் செய்வான் என்பது, 'தம்முதல் குருவுமாய்' என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பும்

என்பதால் அடிகளுக்கு அத்திருக்கோயிலில் இருந்த பற்றுமை வெளிப்படும். நீத்தல் விண்ணப்பம் அடிகள் பாடியது இவ்வுத்தர கோச மங்கையிலேயே ஆகும். திருப் பெருந்துறையில் இருந்து பாடும்போதும் அது மின்னலிட்டமையால் உத்தர கோச மங்கையுள்ளாய் என்றார்.

தாம் செய்யும் தெய்வப் பணிக்கு, அத்தெய்வக் குறிப்பும் வாய்த்தல் சீரிதாம் என்பாராக, "எது எமைப் பணிகொளும் ஆறு; அது கேட்போம்" என்பது திருவருட் குறிப்பின்படி செயலாற்ற விரும்பிய விருப்பத்தின் முத்திரையாம்.

8.முந்திய முதல் நடு

இறைவனே, உலகத் தோற்றமும் நிலைபேறும் மாற்றமும் உன் எண்ணத்தின் படி நிகழ்வன. அதனால் உன்னை முதல் நடு இறுதியானவன் என்று கூறுவர். உன் முழுமுதல் தன்மையை உன் ஆணைபெற்று முறையே நடத்தப்படும் முத்தொழிற்குரிய அயன் அரி அரன் என்னும் மூவரும் உன்னை அறியார் எனின் பிறர் எவரே அறிய வல்லார். பந்தாடுதலில் தோற்ற விரலுடைய அம்மையும் நீயும், நின்னிடத்துப் பேரன்பு கொண்ட அடியார்களின் வழிவழிப் பழமையான வீடுகள் தோறும் எழுந்தருளிய பெரும் பொருளாவாய்.

"முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே"

சிவந்த நிறத்தையுடைய எரியை ஒத்த சிவந்த திருமேனியையும் காட்டினை. திருப்பெருந்துறையில் பரம் பொருளாய் இருந்தருளும் திருக்கோயிலையும் காட்டினை. எல்லா உயிர்க்கும் அருள் பாலிக்கும் அருளாளனாகவும் காட்டினை. தானே வந்து ஆட்கொள்ளவும் ஆயினை. கிடைத்தற்கு அரிய அமுதாகத் திகழ்பவனே திருப்பள்ளியினின்றும் எழுந்தருள் புரிவாயாக.

"செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே"

இறைவன் ஒருவனே மூவராகி முத்தொழில் புரியவன் என்பதை

"ஆதி, அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனும் தானே"

என்று ஞான உலாக் கூறும். அடியார்க்கு அருள இறைவன் செல்லுங்கால் அருள்வடிவாம் அம்மையும் தானுமாய்ச் செல்வான் என்பதை,

"பந்தணை விரலியும் நீயும் நின்னடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே"

என்பதால் காட்டினார். பழங்குடில் என்பது வேய்ந்து பழமைப் பட்ட குடில் என வறுமை நிலை குறியாமல், வழிவழியடியார் வாழ்ந்த பழமையாகிய பெருமை நிலை குறிப்பதாம்.

"அன்பெனும் குடில்புகும் அரசே"

என்றார் வள்ளலார்

'செந்தழல் புரை' என்பது செந்தழல் போன்ற என்னும் பொருள் தருவதோடு, புரை உயர்வாகும் என்பதால் அதனினும் மேம்பட்ட என்னும் பொருளும் தருவதாம்.

"திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே"
"திருப் பெருந்துறை மன்னா"

என்று பல்கால் கூறிய மாணிக்க வாசகர்,

"திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி"

என இப்பாடலில் கூறுகின்றார்.

மாணிக்க வாசகர்க்கு இறைவன் குருவாகக் காட்சி தந்த காலத்திற்கு முன்னர்க் கோயில் இருந்ததோ என்னும் ஐயம் உண்டாதல் இயற்கை. மாணிக்கவாசகர் தாமே பரிவாங்கு மாறு பாண்டியன் தந்த பொருளைக் கொண்டு திருக்கோயில் கட்டினார் என்னும் வரலாறுக்கு இது மாறாகுமோ எனின் ஆகாதாம். இதனை,

"திருப் பெருந்துறையில் இறைவன் குருந்தமர நிழலில் எழுந்தருளியிருந்து அடிகட்குக் காட்சி வழங்கிய இடத்தையே அடிகள் திருப்பெருந் துறை யுறை கோயில் என்று அருளினார். இது திருப்பெருந்துறைக் கோயில் என்னாது, திருப்பெருந் துறையுறை கோயில் என்றதனானே பெறப்படும். திருப்பெருந் துறைக்கண் நீ எழுந்தருளி இருந்த கோயில் என்பது இதன் பொருளாதல் வெளிப்படை. இதனையே அடிகள் பின்னர்க் கோயிலாக்கினார்" என்று ஆய்வாளர் கூறுவர்.

இறைவன் தமக்குக் காட்டாதன வெல்லாம் காட்டியதாகச் சுட்டிக் கூறிய செய்தியைச் செந்தழல் புரை மேனியும் காட்டி, திருப்பெருந்துறையுறை கோயிலும் காட்டி, அந்தணன் ஆவதும் காட்டி என்று மூன்றாக விரித்துக் கூறினார்.

தம்முயற்சி இல்லாமலும் இறைவன் தம்மை ஆட்கொண்டான் என்பதை 'வந்து ஆண்டாய்' என்பதால் குறித்தார்.

உள்ளுதோறும் உள்ளுதோறும் உவகை பெருக் கெடுக்கச் செய்யும் அமுதாக இறைவன் இருந்தமையால் அடிகளார்

அவனை 'ஆரமுதே' என அழைத்தார். அரிய அமுதே என்பதை அல்லாமல் அடைதற்கு அரிய அமுதே என்னும் இணையிலாப் பெருமை யுடையது என்பதையும் குறிப்பதாம். 'ஆரமுதம் மாந்தினர் வேறொன்றும் வேண்டுவரோ' என்பது பாரதியார் வாக்கு.

୨.விண்ணகத் தேவரும்

வானுலகில் வாழ்வாராம் தேவரும் நெருங்கிப் பயன் கொள்ள முடியாத சிறந்த பொருளே, உன் ஏவல் எதுவோ அதனைப் புரிவதே தவம் எனக் கொண்டு வாழும் அடியோ மாகிய நாங்கள் உன் திருவடியை மறவாப் பேரன்பொடு வாழச் செய்வதற் கென்றே வளமிக்க திருப் பெருந்துறை உறைவோய் ஆயினை! பெருமானே உனக்கு நாங்கள் வழிவழியாக அடிமையுடையோம்.

"விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறைவழி யடியோம்"

காணற்கு அரிய காட்சியாகி என்றும் கண்ணுளே நின்று இன்பத்தைச் சுரந்து கொண்டே இருக்கும் தேனானவனே, அருட்கடலில் இருந்து கடைந் தெடுத்த அமுதம் அன்னவனே சக்கை இல்லாக் கரும்பே ஆகி இன்பம் செய்பவனே, உன்னை விரும்பும் அடியார்களின் எண்ணத்துள் எண்ணமாகத் திகழ்பவனே உலகத்து உயிர்களுக் கெல்லாம் உயிராக விளங்குபவனே எம் பெருந்தக்க பெருமானே நின் திருப்பள்ளி யினின்று எழுந்து எமக்கு அருள் புரிவாயாக.

"கண்ணகத்தே நின்று களிதரு தேனே
கடலமுதேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே."

அமர நிலை எய்தினாரும் அடைதற்கு அரிய பொருளாகிய இறைவன், மண்ணுலகுக்கு வந்தருளி ஆட்கொண்ட அருமையில் பூரித்தவராய் மணிவாசகர் இப்பாடலைப் பாடுகின்றார். பெறுதற்கு அரிய பேற்றைப் பெற்ற பெருமிதமும், அப் பெருமிதத்தால் உண்டாகிய பேரின்பமும் பொருளாக இப்பாடல் கிளர்ந்துள்ளதாம்.

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்பார் தொல்காப்பியர். பெறுதற்கு அரிய மெய்யுணர்வுக் கல்வியும், வெல்லுதற்கு அரிய பொறிபுலன்களை வெற்றி கொண்ட தறுகண்மையும், பிறரெல்லாம் எய்துதற்கு அரிய பெருந்தக்க புகழை அடைந்த இசைமையும், நினைதோறும் நினைதோறும் இன்பச் சுரப்பாகத் திகழும் திருவருட் கொடையுமாகிய இந்நான்கும் ஒருமித்து வாய்க்கக் கிடைத்த பெருமிதம் பேசற்கரிய பெருமிதமேயாம்.

அப் பெருமிதப் பெருக்கிலே இறைவன் தேனாகவும் அமுதாகவும் கரும்பாகவும் இனிப்பதை வாயார எடுத்துக் கூறுகிறார். 'தேன்' நாவுக்குச் சுவைப்பது. சுவைத்த சிறிது பொழுதில் மாறியும் போவது. ஆனால் மணிவாசகர் சுவைப் பொருளாக வார்த்த தெய்வத்தேன், அவர்தம் கண்ணகத்தே புகுந்து நின்று, நினைதோறும் அக்காட்சியை மாறா உவகையாகக் காட்டி நிற்பது ஆதலால் "கண்ணகத்தே நின்று

களிதரு தேனே” என்றார். அமுதம் உயிர்தளிக்கச் செய்வது. உண்ணும் அமுதமே உயிர் தளிர்க்கச் செய்யும் எனின், திருவருட் கடலில் இருந்து திரண்டெழுந்த தீராச் சுவை அமுதத் தித்திப்புக்கு இணை ஒன்று உண்டோ? உண்ணும் அமுதா அது! உன்னும் அமுதம் அல்லவோ! ஆதலால் கடலமுதே என்றார். ‘ஆனந்தக் கடல்’ என்பது இறைவனைச் சுட்டுவதேயாம்.

கடித்துத் தின்னும் கரும்பானால் கடுமையுண்டு; கோது ஆகிய சக்கையும் உண்டு. இக்கரும்பு கடியாமல் சுவையூட்டும் கருத்துக் கரும்பு. கருதுவார் உள்ளத்தே அள்ளூறி நின்று சுவைக்கும் கரும்பு.

இனிமைக்கு எல்லாம் இனிமையது இறையடி என்பதை,

“பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டியணைத் தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே
மெய்ம்மையறி வானந்தம் விளங்குமரு ளமுதே
தீர்த்தா என் றன்பரெலாம் தொழப்பொதுவில் நடிக்கும்
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழி யேற்றருளே”

எனவரும் வள்ளலாரின் அருள்விளக்க மாலை தெளிவிக்கும்.

10.புவனியிற் போய்ப்

எந்நாட்டவர்க்கும் இ'றைவனாகிய பொருள் தென்னாட்டவர்க்குச் சிவமெனும் பெயரால் அருள் விளக்கம் செய்கின்றது என்பதை,

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்னும் மாணிக்க வாசகர் மணிமொழி உலகுக்கு அறைகூவும்.

எங்கெங்கும் நிறைந்த இறைவன் இத்தென்னாட்டிலே சிவம் என்னும் பெயரால் விளங்குகின்றான். பிறபிற நாடுகளில் பிறபிற பெயர்களால் அவரவர் கொள்கைகள் கருது கோள்கள் என்பவற்றுக் கேற்பத் திகழ்கிறான் என்னும் சால்பினை உலகுக்கு மணிவாசகம் அருள்கின்றது. மெய்யான இறை நம்பிக்கையுடையார் நெறி இதுவேயாம்.

இத்திருப்பள்ளி எழுச்சிப் பாடல், விண்ணகத்திலும் இம்மண்ணகப் பேறு பெரிது என்பதை விளக்கி இங்கே பெருமான் திருக்கோயில் கொண்ட பெருமையது அது என்கிறது.

திருப் பெருந்துறையுறை பெருமானே, மண்ணுலகில் நாம்போய்ப் பிறவாமையால் நாம் நம் நாள்களை வீணாகப்

போக்குகின்றோம். இப்பூவுலகம் சிவபெருமான், ஆருயிர்கள் உய்யுமாறு திருவருள் பாலிக்கும் பெருமையது என்று திருமால் விருப்பமுறவும் நான்முகன் ஆவலுறவும் நின் திருவருளொடு நீயும் இப்புவியில் கோயில் கொண்டு, எம்மையும் எம்மனைய அடியார்களையும் ஆட்கொண்டாய். எல்லா வல்லமையும் உடைய இறைவனே, எண்ணுவார் எண்ணத்தில் அரிய அமுதமாகச் சுவையேற்றுபவனே திருப்பெருந்துறையுறை பெருமானே நின் திருப்பள்ளியினின்று எழுந்து எங்களுக்கு அருள் பாலிப்பாயாக என வேண்டி அமைகிறார்.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன் விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதேபள்ளி எழுந்தரு ளாயே!

ஒரு நாளையும் வீண்நாள் ஆக்குதல் கூடாது என்பதும், அவ்வாறு வீண்நாள் ஆக்காமல் பயன்பட வாழ்வாரின் வாழ்நாள் மிக்கு விளங்கும் என்பதும், வாழ்நாள் என்னும் நீர்ப்பெருக்கு வறிதே ஓடிவிடாமல் தக்கவாறு அணைகட்டித் தக்கதாய்க் காத்துவைத்துப் பயன் கொள்ள வாய்ப்பது என்பதும் திருவள்ளுவர் உரைப்பதாம்.

“வீழ்நாள் படாமல்நன் றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்”

என்பது அப்பாட்டு.

பயன்படாமல் கழிந்த ஒருநாளை எண்ணிய புலவர் அந்நாளைப் பாழாய்ப் போன நாள் "பதடி வைகல்" எனப் பழித்தார். அத் தொடரில் மயங்கி மகிழ்ந்த அறிஞர் உலகம் அப்புலவர்க்குப் பதடிவைகலார் என்னும் பெயர் சூட்டி வைத்துக் காத்தது. பள்ளி எழுச்சி என்பது வைகறையில் எழவேண்டும் என்பதைப் பறை சாற்றுவது. பறவையும் விலங்கும் மற்றை மற்றை உயிரிகளும் இயற்கையின் உந்துதலால் எழுந்து தத்தம செயற்பாடுகளில் தலைப்பட்டுத் தளிர்ப்பதைக் காட்டுவது. அதனை நாட்டவர்க்கு உணர்த்தி நலம் செய்யும் வகையால் உறக்கமிலா விழிப்பில் திகழும் இறையை உறக்கத்தில் இருந்து எழுப்புவதாக உலகை எழுப்பும் நோக்கினது இப்பாவைப்பாட்டு.

வைகறையில் எழும் இன்பமே இன்பம்; அவ்வின்பக் கிளர்ச்சி கற்பார்க்கும் அலுவல் புரிவார்க்கும் பணியிடைத் தோய்வார்க்கும் காலந்தவறாக் கருத்தை உணர்த்திக் கழிபேரின்பம் செய்யும் என்னும் நோக்கினது. வாழ்வின் நோக்கம் இறைமையில் கலந்து இன்பப் பொருளாய்த் திகழ்வது என்பதை உணர்ந்து திருப்பள்ளி எழுச்சி பாடித் திளைத்துக் கடமை புரிவோமாக.

பாவையும் பள்ளி எழுச்சியும் முற்றும்.

குறிப்பு

SRI SARADA NIKETAN COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMAN

KANAVAIPUDUR - 636 352. OMALUR TALUK, SALEM DIST.